
# அம்மாவின் உலகம்



## த.கலாமணி

ஜீவநதி வெளியீடு



# அம்மாவின் உலகம்

## த.கலாமணி

ஜீவநதி வெளியீடு
கலை அகம்
அல்வாய்
2013

**அம்மாவின் உலகம்** (சிறுகதைத்தொகுதி)

© த.கலாமணி

**முதற்பதிப்பு**
2013 ஏப்ரல்

**விலை**
ரூபா 200/=

**நூலாக்கக் குறிப்புகள்**
பக்கங்கள் vi + 86

**அட்டைப்பட வடிமைப்பு**
க.பரணீதரன்

**வெளியீடு**
'ஜீவநதி', கலைஅகம், அல்வாய்

**அச்சுப்பதிப்பு**
மதி கலர்ஸ், நல்லூர்

ISBN:

ஜீவநதி வெளியீடு:25

# காணிக்கை



**உயிருள்ளவரை**

**பாசமுள்ள சகோதரியராய் வாழ்ந்த**

**அம்மா - தம்பிஐயா பர்வதம்**

**அம்மம்மா(சிறியதாய்) -கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன்**

**ஆகியோருக்கு**

# பதிப்புரை

ஜீவநதியின் 25ஆவது வெளியீடாக கலாநிதி த.கலாமணியின் "அம்மாவின் உலகம்" சிறுகதைத் தொகுதி வெளிவருவதையிட்டு ஜீவநதி பதிப்பகத்தின் பதிப்பாசிரியர் என்ற வகையில் மகிழ்வடைகின்றேன்

ஜீவநதியின் முதலாவது வெளியீடாக த.கலாமணியின் பாட்டுத் திறத்தாலே சிறுகதைத் தொகுப்பு 2008இல் வெளிவந்தது. இன்று 25ஆவது வெளியீடாக அவரது சிறுகதைத் தொகுப்பு வெளிவருகின்றது. ஜீவநதி பதிப்பகம் ஆரம்பித்து குறுகிய காலத்தில் 25 தரமான நூல்களை வெளிகொணர்ந்துள் ளது என்பதனை நினைக்கும் போது பெருமையும் பூர்ப்பும் அடைகின்றேன்.

"அம்மாவின் உலகம்" சிறுகதைத் தொகுப்பும் வாசகர்களிடையே பெரும் வரவேற்பை பெறும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை நூலாசிரியர் எனது தந்தை நீண்ட ஆயுளோடு வாழ்ந்து இன்னும் பல நூல்களை இலக்கிய உலகிற்கு தந்து வளம் சேர்க்க வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

– க.பரணீதரன்

2013.03.30

# என்னுரை

"அம்மாவின் உலகம்" எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதி ஆகும். எனது சிறுகதைகளில் அநேகமானவற்றில் நானும் ஒரு பாத்திரமாகவே உள்ளேன். சூழலின் யதார்த்தம் என்னைப் பாதித்த வேளைகளில் அவற்றின் வெளிப்பாடுகளே இவை.

சிறுகச் சொல்லி உயர்ந்த பட்சத் தாக்கத்தை ஏற்படுத்துதல் சிறுகதையின் பண்பு என்பர். சிறுகதையின் வரைவிலக்கணத்தை வைத்துக் கொண்டு அதற்கமைவாக சிறுகதை எழுத வேண்டும் என நான் ஒருபோதுமே திட்டமிடுவதில்லை. நல்ல பல சிறுகதைகளைப் படித்ததனாலோ என்னவோ இயல்பாக நான் எழுதிச் செல்லும் சிறுகதைகள், சிறுகதை வரைவிலக்கணத்திற்கு அமைவாக அமைந்திருப்பதாகப் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

என்னைப் பாதித்த விடயங்களும் எனது அனுபவங்களும் என்னுள் அடைகாக்கும் நிலையிலிருந்து படைப்பாக உருவாகுவதற்குச் சில வேளைகளில் தாமதமாகியதுண்டு. இதனால் இப்படைப்புகளின் காலப் பின்னணி சமகாலத்திற்கு முற்பட்டதாக உள்ளது. எனினும் அக்காலப் பின்னணியைச் சுட்டக்கூடிய வகையிலான சம்பவங்கள் வாசகர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தா என எண்ணுகின்றேன்.

இச்சிறுகதைத் தொகுதியை இச்சந்தர்ப்பத்தில் கொண்டு வர வேண்டுமென ஜீவநதி ஆசிரியர் என்னுடைய மகன் க. பரணீதரன் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவே இந்நூலாகும். இந்நூலின் வரவில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- த. கலாமணி

2013.03.28

# பொருளடக்கம்

அம்மாவின் உலகம்

நிழல்

தந்தையரும் தனயரும்


அக்கினிக்குஞ்சு

கசிவு

அவலம்

எங்கெங்குகாணினும்

மனிதர்கள்


அம்மாவின்
உலகம்



# அம்மாவின் உலகம்

அம்மா அந்த அறையில் இனி அடைபட்டுப் போய் விடுவா என்று தான் எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். பத்தடிச் சதுர அறைக்குள் அம்மாவின் வாழ்வு முடக்கப் பட்டதனால் அம்மாவின் வாழ்நாட்களை இனி எண்ணிச்சொல்லிவிடலாம் என்றும் நினைத் தார்கள். எனது இளைய சகோதரியைக் கழி விரக்கத்துடன் பார்த்தார்கள். "ஒன்றுக்கும் யோசியாதை, படுக்கைப் புண் வராமல் பார்த்துக்கொள்" என்று ஆலோசனையும் சொன்னார்கள்.

தங்கச்சி பயந்து தான் போனாள். ஒவ்வொரு நாளும் "திரும்பிப் படணை" என்று சொல்லி, அம்மாவின் முதுகுப் புறத்தைப் புரட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டாள்.

அம்மாவுக்கு இது பெரிய தொந்தரவாகப் போய்விட்டது. சிலவேளைகளில் தங்கச்சியை ஏசி, கை ஓங்கவும் செய்தா.

தங்கச்சிக்கு அம்மாவின் எதிர்ப்பு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அம்மாவின் முதுகுப்புற உடல்மீதான சோதனையை நாளாந்த

கடமையாக்கிக் கொண்டாள். முதுகைத் தடவித் தடவி எங்காவது கண்டல்கள் இருக்கின்றனவா என்றும் பரிசீலித்துக் கொண்டாள்.

இந்த நடைமுறைகள் எல்லாம் நீண்ட நாட்களாக எனக்குத் தெரிய வரவேயில்லை. பின்பு ஒரு சமயம் அம்மா தான் அதனையும் எனக்குச் சொன்னா.

ஒரு நாள் எதேச்சையாகத்தான் அதனை அவதானித்தேன்.

படுக்கையிலிருந்து உடலை முன்னோக்கி வளைத்து, நிமிர்வதும் பின்பு சாய்வதுமாக இருந்த அம்மாவைக் கண்டு, நான் அதிர்ந்துபோனேன். "மூச்சுவிடக் கஷ்டப்படுகிறாரோ" என நினைத்து, அம்மாவின் முதுகுப் புறத்தை என் கைகளில் தாங்கி, நெஞ்சையும் மெதுவாகத் தட்வி விட்டேன்.

"எனக்கொன்றுமில்லை, ஐயா... நீ உந்தக் கதிரையிலை இரு"

அறையிலிருந்த "சோபா" கதிரையில் என்னை இருக்கச் சொல்லிவிட்டு, அம்மா மீண்டும் மீண்டும் படுக்கையிலிருந்து நிமிர்வதும் சாய்வதுமாகத் தொடர்ந்தா. பின்பு ஒரு காலை மேலே தூக்குவதும் மடக்குவதும் கீழே இறக்குவதுமாகத் தொடர்ந்தவர், மறுகாலுடனும் அதே செய்கைகளைச் செய்தா.

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்னம்மா, ஜிம்னாஸ்ரிக் செய்யிறியளா?" என்று, சிரித்துக் கொண்டே கேட்டுவிட்டேன்.

அம்மாவுக்கு ஜிம்னாஸ்ரிக் என்ற சொல் தெரிந்திருக்க நியாய மில்லைத்தான். ஆனாலும், நான் என்ன கேட்கிறேன் என்பது விளங்கியது.

"ஓம் ஐயா, பயிற்சி தான் செய்யிறன். கையைக் காலை நீட்டி மடக்கி இப்பிடி உடம்பையும் அசைச்சாத்தான் விறைப்பு இல்லாமல் போகும். உவள் சீதர்வையும் ஆரோ வெருட்டிப் போட்டினம், எனக்குப் படுக்கைப் புண் வந்திடுமெண்டு. ஒவ்வொரு நாளும் என்னைப் புரட்டிப்புரட்டிப் பார்க்கிறாள்.

அதுதான் இடைக்கிடை இப்பிடிச் செய்யிறனான் ஐயா…"

எனக்கு அம்மாவின் மீது இரக்கமாக வந்தது. என்னால் தான் அம்மாவுக்கு இந்த நிலையோ என்று குற்ற உணர்வும் தலைதூக்கியது.

நான் பிறந்தவேளை அம்மாவுக்குக் "காயாசுவாதம்" வந்து விட்டதாம். அம்மா தப்பிப் பிழைப்பாரோ என்பதே சந்தேகமாகத்தான் இருந்ததாம். ஆனால், அந்த இயலாமையின் மத்தியிலும் "என் குழந்தை… என் குழந்தை" என்று அனுங்கிக் கொண்டிருந்தாவாம். இரண்டு தலைப்பிள்ளைகளை, அதுவும் ஆண்பிள்ளைகளை, நிமோனியாவுக்கும் மலேரியாவுக்கும் பறிகொடுத்துவிட்ட அம்மாவுக்கு, அவரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நிலையிலும் என்னைப்பற்றிய நினைப்பாகவே இருந்ததில் ஆச்சரியப்படுவதற்கேதுமில்லை.

நான் அம்மாவின் உயிர்மூச்சு.

பெண்பிள்ளைகளோடு கூட இருக்க நேர்ந்த நிலையிலும், நினைப்பு முழுவதும் என்னோடு தான். நான் வேலையிலிருந்து வீட்டுக்கு வரப்பிந்தினால் அம்மா தவித்துக் கொண்டிருப்பா. அதனால், அப்படிப்பிந்தி வரும் நாட்களில், அம்மாவுக்கு முகம் காட்டிவிட்டுத்தான் என் வீட்டுக்கு வருவேன்.

சிலவேளைகளில், அம்மாவுக்கு விளக்கம் சொல்லிவிட்டு வருவதில் சிறிது தாமதமாகிவிடும்.

வீட்டிலும் மனைவியும் பிள்ளைகளும் என்னை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள். வழியில் ஏதும் நேர்ந்துவிட்டதோ என்று ஏங்கிக்கொண்டிருப்பார்கள்.

அப்படியான ஒரு காலச்சூழல்.

பல சோதனைத் தடைகளைத் தாண்டி, தினமும் முப்பந்தைந்து கிலோமீற்றர் தூரம் பயணம் செய்துதான் எனது அலுவலகத்துக்குப் போக வேண்டும். நாளொன்றில் மூன்று மணித்தியாலத்துக்கும் அதிகமாக பிரயாணத்திலேயே கழிந்துவிடும்.

தினமும் வேலை முடிந்து வந்து, அம்மாவைப் பார்த்துவிட்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டு விட்ட நான், வீட்டுக்கு வருமுன்னரே அம்மாவையும் கண்டு விட்டு வரும் நாட்களில் மனைவியும் பிள்ளைகளும் தங்களுக்குள் ஏதோ ரகசியம் கதைப்பார்கள். நான் ஏதும் கேட்டுவிட்டால், சின்னவனிடமிருந்து நறுக்கென்று பதில் வரும்.

“நாங்களுந்தான் பாத்துக் கொண்டிருக்கிறம்”

அப்போதெல்லாம் நான் சிரித்து மழுப்பும்போது, என் முகத்தில் அசடு வழிவதாக அவர்கள் சொல்லிக்கொள்வார்கள். அடுத்தகணமே, நாம் எல்லோரும் ஒன்றாகக்கூடி அன்றைய நாள் நடப்புகளைப் பகிர்ந்து கொள்வோம்.

இவை எல்லாம் வாழ்க்கையில் சகஜம் தானே.

இரவு நேர உணவையாவது எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடக்கூடியதாக இருக்கிறதே என்று ஆண்டவனுக்கு என் நெஞ்சத்தால் நன்றி சொல்வேன்.

இரவுச் சாப்பாட்டு வேளையின் போது, பிள்ளைகளுக்கு எங்கள் குடும்பக் கதைகளைச் சொல்லிக்கொள்வேன். பிள்ளைகள் ஆர்வமாகக் கேட்பார்கள். சாப்பாட்டு நேரம் சிலவேளைகளில் ஒரு மணித்தியாலத்திலும் கூடுதலாகவும் கடந்து விடும்.

நான் சொல்லும் கதைகளில் அநேகம் ஐயாவைப் பற்றியவைதான். ஐயாவின் “வீர தீரச் செயல்களை” நான் சொல்லக்கேட்டு, பிள்ளைகள் சிரித்து மகிழ்வார்கள். சில கதைகளை சின்னவனுக்காக நான் சொல்லத் தொடங்கும் போது, மூத்தவன் முந்திக்கொள்வான். முன்பே என்னிடமிருந்து கேட்டிருந்த கதையை, தானே விஸ்தாரமாக சொல்லத் தொடங்கிவிடுவான்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஐயாவிடமிருந்தும் அம்மாவிடமிருந்தும் நான் கேட்ட கதைகளை, இவனால் எப்படி இவ்வளவு தூரம் விஸ்தாரமாகச் சொல்ல முடிகிறது?

இவனுக்கு மூன்றுவயது நிறைவதற்குள்ளேயே ஐயா இறந்து விட்டார். ஐயாவின் உருவம்கூட இவனுக்குச் சரியாக நினைவிருக்குமோ தெரியாது. அப்படி இருக்கையில், ஐயாவை "ஹீரோ"வாக உருவகித்து, நான் சொன்ன கதைகளை தம்பிமாருக்குச் சொல்வான்.

அண்ணாவியாரான ஐயா இரவுவேளைகளில் நாடகப் பழக்கத்துக் காக வரணிக்குச் சைக்கிளில் போய்வருவது பற்றியும், அப்படியான ஒரு நாளில் நடுச்சாமம் கடந்து விட்ட வேளையில், வழியில் பேய்களின் சேஷ்டை களைக் கண்டும் பயப்படாமல் ஐயா வீட்டுக்குத் திரும்பியது பற்றியும், தானே கூட இருந்து பார்த்தது போல விபரிப்பான். நாரதராக வேஷம் கட்டிய ஐயா, ஒரு சமயம், கையிலிருந்த கைக்கடிகாரத்தைக் கழற்றாமலே மேடையேறிய போது, முனிவரிடம் பகிடியாக நேரம் கேட்ட பபூனாக நடித்தவர் நாடகத்தின் பின்னர் ஐயாவிடம் பட்டபாடு கேட்டு, தம்பிமார் குதூகலம் அடைவார்கள்.

எனக்கு மலைப்பாக இருக்கும்.

கர்ணபரம்பரைக் கதைகள் இன்றும் வளமாக இருப்பதற்கு இந்தத் தொடர்ச்சிதான் காரணமோ?

ஐயாவின் "வீர, தீரங்களை" எல்லாம் பிள்ளைகள் பரிமாறிக் கொள்ளும்போது, நான் அம்மாவை நினைத்துக்கொள்வேன்.

ஆரம்பக்கல்வியோடு படிப்பை நிறுத்திக்கொண்ட அம்மாவால் பின்பு ஐயாவோடு ஈடுகொடுத்து எப்படி வாழ முடிந்தது? ஐயாவின் நாடக முயற்சிகளுக்கெல்லாம் அம்மாவும் அநுசரணையாக இருந்ததனால் தானே ஐயாவால் அவற்றைச் செய்ய முடிந்திருக்கும்.

எங்கள் வீட்டில், அந்த நாட்களிலேயே கல்கியும் விகடனும் குவிந்திருக்கும். முல்லைத்தீவில் தொழில் செய்து கொண்டிருந்த பெரியய்யா இடை இடையே ஊருக்கு வரும் காலங்களில் அவற்றை எங்கள் வீட்டில் கொண்டுவந்து "போட்டுவிட்டு" போவார். அவற்றில் வெளிவந்த தொடர்கதைகளை நானும் அக்காவும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவோம். கல்கியின் "பொன்னியின் செல்வன்", அகிலனின் "பாவை விளக்கு" என்றவாறு கட்டுப் புத்தகங்கள் பல எங்கள் வீட்டில் சேர்ந்து கொண்டன. நாம்

பாடசாலையிலிருந்து திரும்பும்போது, சில வேளைகளில் அம்மா அந்தப் புத்தகங்களைக் கையில் வைத்திருப்பார். நாங்கள் ஆச்சரியப்படும் படியாக, தான் படித்த கதைப்பகுதிகளை எங்களுக்குச் சொல்வா. எங்கள் ஆச்சரியத்துக்கும் அம்மாவே பதிலளிப்பார்.

“எனக்கும் பெற்றார் உயிரோடையிருந்து எட்டாம் வகுப்பு
மட்டுமாவது படிப்பிச்சிருந்தால்,
நானும் இப்ப ஒரு ரீச்சராய் இருந்திருப்பன்...”

அம்மாவின் ஆதங்கம் அந்த வார்த்தைகளில் வெளிப்படும். தான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போதே தங்களை விட்டுவிட்டு ஒரு மாதத்திற்குள்ளாகவே தாயும் தகப்பனும் இறந்துபோய் விட்டதைச் சொல்லிக் கண் கலங்குவா. பெற்றோரின் மரணத்தின் பின் அம்மாவின் படிப்பை இடைநிறுத்த வேண்டியிருந்தது. சிறிய தாயின் பராமரிப்பில் வாழ்ந்த சகோதரங்கள் என்றும் தங்களுக்குள் ஒற்றுமையாகவே இருந்தார்கள்.

அம்மாவைப் பற்றி ஐயா உயர்வாகவே சொல்லிக்கொள்வார். நாடகப் பழக்கத்திற்காக வீட்டுக்கு வருகின்ற கலைஞர்களை எல்லாம் உபசரிப்பதில் அம்மா குறை ஒன்றும் வைக்காததில் ஐயாவுக்குப் பரம திருப்தி. சிவராத்திரிக்கு மேடையேற்றுவதற்கென பிள்ளைகளைப் பழக்கும் நாடகப் பயிற்சிகள் சிவராத்திரிக்கு மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பித்து விடும். மூன்று, நான்கு மாதங்களாக தினமும் இரவுவேளைகளில் எட்டு மணி தொடக்கம் பதினொரு மணி வரை எங்கள் வீட்டில் கூடும் பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் நாடகப்பழக்கம் காண வரும் ஊரவரையும் “கட்டி மேய்ப்பது” அவ்வளவு சுலபமில்லை. ஆனால், அம்மாவுக்கு அது முடிந்தது. ஊரில் எல்லோரும அம்மா மீது அன்பாக இருந்தார்கள்.

அம்மாவால் எல்லாவற்றையும் எப்படித்தான் சகித்துக்கொள்ள முடிந்ததோ?

ஒரு சிவராத்திரியின்போது, ஐயா கோயிலில் சிவராத்திரி மேடையில் நாடகம் நடித்துக் கொண்டிருந்தார். ஆறு மாதக் குழந்தையான சின்னத்தங்கச்சி ராதாவுக்கு “குழந்தைப்பிள்ளை வருத்தம்”. ஐயாவுக்கும்

தவிர்க்க முடியவில்லை. ஓரிரவுக்குள் அப்படி ஒன்றும் நடந்துவிடாது என்று தான் ஐயா நம்பினார். பின்னேரம் சின்னத்துரைப்பரியாரியாரிடம் பெற்றுக்கொண்ட சளி மருந்துடன் இரவைச் சமாளிக்குமாறு அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். இரவு அம்மாவும் நாங்களும் தான், வீட்டில். நாங்களும் சின்னப் பிள்ளைகள். இரவு ராதாவுக்கு வருத்தம் கூடிவிட்டது. பக்கத்து வீட்டிலிருந்து சின்னம்மாவை அழைத்து வருமாறு அக்காவிடம் அம்மா கேட்கிறா. சின்னம்மாவையும் கூட்டிக்கொண்டு அக்கா வந்து சேர்ந்தபோது, ராதாவின் கண்கள் நன்றாகச் சொருகிக் கொண்டன. நிலைமையைப் புரிந்து கொண்ட சின்னம்மா ராதாவின் நெஞ்சை நீவி விட்டுக்கொண்டிருந்தா. எல்லாம் ஒரு சொற்ப நேரத்தில் முடிந்து விட்டது.

அம்மா பெருங்குரலெடுத்து அழவில்லை. கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தா. ஐயாவை அழைத்து வர "ஆள் அனுப்பவும்" சின்னம்மாவை விடவில்லை. நாடகம் முடிந்து, கோயில் மணி அடித்த நேரத்தில் தான் ஐயாவுக்குச் செய்தி சொல்லி அனுப்பினா.

அம்மாவுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தும் நான்கு பிள்ளைகளைச் சின்ன வயசிலேயே கடவுள் பறித்தெடுத்துவிட்டான். அம்மாவுக்கு எவ்வளவு தாக்கமாக இருந்திருக்கும் என்று இப்போது நான் நினைத்துப்பார்க்கிறபோது என்னாலேயே தாங்கிக்கொள்ள முடியாதிருக்கிறது. ஆனால், அம்மா எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டா.

> "போனது போகட்டும். இருக்கிற என்ரை மூன்று பிள்ளையளுக்கும் சுகத்தைத் தா... நீண்ட ஆயுளைத் தா..."

அம்மாவின் இந்த வேண்டுதலை நான் காதாரக்கேட்டிருக்கிறேன். கால் முறிந்து, இந்த அறைக்குள் அம்மா முடக்கப்பட்டபின், நித்திய இறைஞ்சுதலாய் பிள்ளைகளின் சுகத்தையும் நீண்ட ஆயுளையும் அவர் வேண்டியதை மூன்று, நான்கு தடவைகள் அறைக்கு வெளியே நின்று அம்மாவுக்குத் தெரியாமலே கேட்டிருக்கிறேன்.

நான் ஆசிரியர் பயிற்சி மேற்பார்வைக்காக, இந்தப் பிரதேசப் பாடசாலைகளுக்குச் சென்று விட்டு வரும் நாட்களில், பகல் வேளைகளில் அம்மாவையும் "எட்டிப் பார்ப்பதுண்டு".

வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். தங்கச்சி பள்ளிக்கூடத்துக்குப் படிப்பிக்கப் போயிருப்பாள். அம்மாவின் அறை சற்று "நீக்கல்" விட்டுச் சாத்தியிருக்கும்.

அம்மா மெல்லிய குரலில் பாடிக்கொண்டிருப்பா.

"ஆலடி மேவிடும் ஐங்கரனே அருள்வாயே என்றும் துணை நீயே..."

பாடலினிடையே அம்மா கதை சொல்வா. யாருடனோ பேசுவார். சிலவேளைகளில் ஆண்டவனுடன் பேசுவது போல இருக்கும்.

அந்தக்கதைகளிலிருந்தும் நான் அறிந்து கொண்டவை பல. அம்மாவுக்கு கூர்ந்த அவதானிப்புத்திறன். உலக நடப்புகள் எல்லாம் "அத்துப்படி". ஊர்ச்செய்திகளை எல்லாம் நான்கு சுவர்களுக்குள் அடைந்து கொண்டுவிட்ட இந்த நிலையிலும் அறிந்து வைத்திருப்பா.

அம்மாவின் கால் முறிந்து இப்போது ஏழு வருடமாகிவிட்டது. தங்கச்சி இடை இடையே அம்மாவுக்கு "வித்தியாசமாக" இருப்பதாகச் சொல்லி உறவினர் சிலரை அழைத்து வந்து காட்டுவாள்.

அவர்களுக்கு தங்கச்சிமீது இரக்கமாக இருக்கும்.

"இப்போதைக்கு ஒண்டுஞ் செய்யாது. பாவம், நீ தான் கஷ்டப்படப் போறாய்..."

"நீ நல்லா மெலிஞ்சு போனாய். உன்னையும் கவனிச்சுக்கொள்..."
"எல்லாரும் இப்ப எம்.ஏ. படிக்கினமாம்... உனக்குத்தான் கொடுத்து வைக்கேல்லை..."

அம்மாவுக்கு எல்லாம் கேட்கும். ஆனால், நித்திரை கொள்வது போலப் பாசாங்கு செய்து கொண்டு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பா. தங்கச்சிக்கு அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது விளங்கியதோ இல்லையோ அம்மாவுக்கு எல்லாம் விளங்கும்.

தங்கச்சி பாடசாலைக்குப் போயிருக்கும் நேரத்தில் ஐயாவுடனான

உரையாடலில் அம்மாவின் ஆதங்கம் வெளிப்படும்.

"நான் என்ன செய்வன் ஐயா... என்ரை ஆம்பிளைப் பிள்ளை யாலை நெடுக என்னைப் பார்க்க முடியுமே. இருபது வருசமா உங்களையும் என்னையும் வைச்சுப் பார்த்தது தானே. இப்ப அதுவும் ஒரு குடிலைக் கட்டிக் கொண்டு போய் இருக்குது..."

அம்மாவுக்கு என்மீது நிறைந்த பாசம். நான் ஒரு வீடு கட்டியதில் பரம திருப்தி. வீடு குடிபுகுதலின்போது அம்மாவை "ஓட்டோ" ஒன்றில் "இழுத்துப் பறிச்சு" வீட்டுக்குக் கொண்டுவந்து வீட்டைக்காட்டி இரண்டு மணி நேரம் வீட்டில் வைத்திருந்தபோது அம்மா பெரிதும் மகிழ்ந்து போனா. "இந்தச் சந்தோஷத்தை ஐயாவும் உயிரோடிருந்து காணமுடியாமற் போய்விட்டதே" என்றும் அம்மா வருந்தினா.

அம்மாவுக்குப் பேரப்பிள்ளைகள்மீது கொள்ளை ஆசை. நான் அம்மாவைப் பார்க்கப் போகும் வேளைகளில் என் சின்னவனும் என் கூட வந்தால், அம்மாவைக் கண்டவுடன் முதலில் கேட்பான்:

"அப்பம்மா, சுகமே?"

"ஓம் ஐயா, நல்ல சுகம்."

அவர்களின் உரையாடல் வெள்ளைக்காரரின் உரையாடல் போல் நாகரிகமாக இருக்கும். பேரப்பிள்ளைகளை "நீங்கள்" என்றே அழைத்து அம்மா மரியாதை செய்வார். அக்காவின் பிள்ளைகளோடு "செல் போனில்" கதைக்கும் போதும் அப்படித்தான். பேரப்பிள்ளைகளின் சந்தோசங்களைப் பார்க்கவேண்டும் என்று அம்மாவுக்கு நிறைந்த விருப்பம். என் சின்னவனுக்கு, அந்த ஆசையைப் பற்றி அடிக்கடி சொல்வா.

"நீங்கள் படிச்சுப்பட்டம் பெறும்வரை நான் உயிரோடை இருப்பன் ஐயா..."

இதைக் கேள்விப்பட்டு, அக்காவுக்குக் கோபம் வந்துவிடும்.

"ஓ! உனக்கு இன்னும் கரைச்சல் தரப்போறாவாமே..."

அக்கா ரெலிபோனில் கதைக்கும்போது தங்கச்சிக்குச் சொல்வா. பாவம், அம்மா. தன் ஆதங்கங்களை எல்லாம் ஐயாவுக்குத்தான் சொல்வா.

"என்ரை ஆம்பிளைப் பிள்ளை என்ன செய்யும் ஐயா... நீங்கள் இருந்தவ்ரை எங்களை எல்லாம் வைச்சுப் பார்த்தது தானே, ஐயா... படுக்கையிலை விழுந்தாப்பிறகு என்னைப் பெம்பிளைப் பிள்ளையள் தானே பார்க்க வேணும், ஐயா..."

"நீங்கள் இருக்கும் வரைக்கும் பெம்பிளைப்பிள்ளையளட்டை கடமைப்படாமல் ஆம்பிளைப் பிள்ளையின்ரை மனிசி கையாலையே வாங்கிச் சாப்பிட்டுட்டுப் போயிட்டியள்... நான் என்ன செய்ய முடியும் ஐயா... இப்பவும் என்ரை பிள்ளை வந்து வந்து பார்த்திட்டுத்தானே போகுதையா..."

"என்னாலே என்ன கரைச்சலய்யா, பிள்ளையளெல்லாம் நல்லா இருக்கவேணும் எண்டுதானே நான் கடவுளட்டை வேண்டுறன், ஐயா..."

ஐயா தன் பேச்சுக்கு என்ன பதில் சொல்வார் என அனுமானித்து, அந்தப் பதில்களுடன் உரையாடல் தொடரும் வகையில் அம்மா சொல்லிக் கொண்டே போவா.

திடீரென்று அம்மாவின் போக்கில் மாற்றறம் ஏற்பட்டு வருவதை நான் தான் முதலில் அவதானித்தேன். ஐயாவுடனான உரையாடலை அம்மா குறைத்துக் கொண்டது போலத் தோன்றியது. ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை என்று தங்கச்சி முறைப்பட்டாள்.

அம்மாவின் உடல்நலத்திலும் மாற்றம் தோன்றியது. அம்மா எழுந்து நிமிராமலே படுத்திருந்தார். அதிகம் கதை இல்லை. அம்மாவைப் பார்த்து விட்டுப் போனவர்கள் அக்காவை அவசரமாகக் கூப்பிடுமாறு சொல்லிச் சென்றனர். செய்தி சொன்ன தங்கச்சிக்கு அக்கா ரெலிபோனில் சொன்னாள்:

"டொக்ரரட்டை கேட்டுப் போட்டுச் சொல்லு. கொத்தானுக்கு லீவு எடுக்கேலாது. வந்தாலும் இரண்டு மூண்டு நாளைக்கு மேலை நிக்கேலாது..."

தங்கச்சி ஏம்பலித்தாள். அம்மாவுக்குக் கடுமைதான் என்று சொன்னாள். என்னுடன் மட்டும் தான் அம்மா ஒருசில வார்த்தைகள் பேசுவதாகச் சொன்னாள்.

அக்கா குடும்பத்துடன் வந்திறங்கியபோது, அம்மாவின் நிலைமை மோசமாகிவிட்டது. அக்காவை அம்மா விழித்துப்பார்த்தாவே ஒழிய கதை இல்லை. நான் டொக்ரர் விமலநாதனை அழைத்துவந்து காட்டினேன். அவர் அம்மாவை நன்றாகப் பரிசீலித்து விட்டு, அம்மாவின் முதுகுப் புறத்தைத் தடவிப்பார்க்குமாறு தங்கச்சிக்குச் சொன்னார்.

நான் அம்மாவின் முதுகுப்புறத்தை மெதுவாகத் தடவிப்பார்த்தேன். ஆங்காங்கே சிறுசிறு கண்டல்கள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மா படுக்கையிலிருந்து நிமிராமல் இருந்த இந்த ஒரு கிழமைக்குள் படுக்கைப் புண் வந்துவிடுமா என்று டொக்ரரிடமே கேட்டேன்.

டொக்ரர் சிரித்துக் கொண்டு, அம்மாவின் கண்டல்கள் மீது விசிறுவதற்கான மருந்துச் சீட்டொன்றை எழுதித் தந்தார். தங்கச்சியின் புருஷன் யாழ்ப்பாணத்துக்குச் செல்ல இருப்பதை அறிந்து, மருந்துச்சீட்டை அவரிடம் கொடுத்தேன். அக்கா டொக்ரரிடம் ஏதோ கேட்டதற்கு, “இரண்டு மூன்று நாளைக்கு ஒன்றுஞ் செய்யாது... சிலவேளை கொஞ்ச நாளைக்கு இழுத்தாலும் இழுத்துப்போடும்” என்று சொன்னார்.

நான் ஆசிரியர் கல்லூரிக்கு ஒருமுறை போய் வருவோமென்று நினைத்துப் புறப்பட்டேன். நேரம் போய்விட்டது.

கையெழுத்து வைத்து லீவை “பிரேக்” பண்ணிவிட்டு, தங்கச்சியுடன் ரெலிபோனில் கதைத்தேன்.

“மருந்து நாலாயிரம் ரூபாவாம். இனி அந்த மருந்து போட்டும் பிரயோசனமில்லையாம். அது தான் இவர் வாங்காமல் வந்துவிட்டார்...”

எனக்கு சுரீரென்றது. பயந்து பயந்து என்னுடன் கதைக்கும் தங்கச்சியை ஏசி என்ன பிரயோசனம் என்று நினைத்துக்கொண்டேன்.

வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வீட்டில் எவரும் இல்லை. எல்லோரும் அம்மாவைப் பார்க்கப் போயிருப்பார்கள்.

நான் அவசர அவசரமாக அம்மாவைப் பார்க்கச் சென்றேன். அம்மாவின் அருகாகச் சென்று அமர்ந்தேன்.

என் மனைவிக்கு என்னை நன்றாகத் தெரியும். என்னுடன் கூட வந்தமர்ந்து அம்மாவின் முதுகுப்புறத்தை மெதுவாகத் திருப்பிவிட, நான் வாங்கிவந்த மருந்தை விசிறி, மெதுவாகத் தடவியும் விடுகிறேன்.

அம்மா ஏதோ சொல்ல "உன்னுவது" போல இருந்தது. என்ன சொல்ல விரும்புகிறா என்று விளங்கவில்லை.

இரவாகி விட்டது. அம்மாவைச் சூழப் பலர் இருந்துகொண்டு, ஊர் நியாயங்கள் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாவுக்கு சிறிதாக மூச்சு இழுத்துக் கொண்டிருக்கிறது.

அக்கா என்னைக் கூப்பிடுகிறாள்.

"தம்பி! கிழவிக்கு இப்ப ஒண்டுஞ்செய்யாது. நாங்கள் நாளைக்கும் பாத்திட்டு நாளையின்றைக்கு வெளிக்கிடப்போறம். நீயும் இங்கை நின்றால் நித்திரை கொள்ளமாட்டாய். மனிசியையும் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு போய் உன்ரை வீட்டிலை படுத்திட்டு நாளைக்கு வா...."

இரவு ஒன்பது மணியாகிவிட்டது. அம்மாவின் அருகாகச் செல்கிறேன். ஆறேழு பேர் இன்னும் அம்மாவின் அறையில் இருந்து தங்களுக்குள் ஊர்க்கதை கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னைக் கண்டதும் ஒருவர் சொல்கிறார்.

"அம்மாவைக் கூப்பிட்டுப் பாருங்கோ, தம்பி"

நான் அம்மாவின் முகத்துக்கு நேரே குனிந்து "அம்மா, அம்மா" என்று அழைத்து நெஞ்சையும் மெதுவாகத் தடவி விடுகிறேன்.

திடீரென்று அம்மாவின் கண்களில் சிறிது மலர்ச்சி. என் கண்களில்

கண்ணீர் வருவதைக்கண்டு அம்மா உருகியிருக்க வேண்டும். கண்களைப் பக்கத்துக்கு அசைத்துக்கொண்டிருந்தா.

நான் குனிந்து அம்மாவைக் கேட்கிறேன்.

“அம்மா! இரவைக்கு உன்னோடை இருக்கட்டுமே, அம்மா...”

மற்றவர்கள் எல்லோரும் புன்சிரிப்போடு என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாவின் வாய் திடீரென்று அசைந்தது. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருக்கிறது.

“இங்கை பாருங்கோடி “வேண்டாம்” என்று மேனோடை கதைக்கறதை... மனுசிக்கு மேனைக் கஷ்டப்படுத்தக்கூடாது எண்டுதான் இப்பவும் நினைப்பு...”

இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. அம்மாவோடு இருந்த போது நிகழ்ந்த சின்னச் சின்னச் சம்பவங்கள் நினைவுக்கு வந்து போகின்றன.

நான் எப்போது தூங்கினேன் என்று தெரியவில்லை. காலையில் ஐந்து மணிக்கு கோயில் மணி அடித்தபோது விழித்துக்கொண்டேன். அம்மாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ என்று மனம் சஞ்சலப்படுகிறது.

“அப்படி ஏதும் நடந்திருந்தால் கோயில் மணி அடிச்சிருக்க மாட்டினம் தானே”

ஊரில் யாரும் இரவு இறந்துவிட்டால் அன்று காலையில் கோயில் மணி அடிப்பதில்லை என்ற வழமையை அறிவு எனக்கு நினைவூட்டுகிறது.

முகத்தைக்கழுவிக் கொண்டிருக்கும் போதே “கேற்” அருகில் நின்று யாரோ கூப்பிடுவது கேட்கிறது.

நிலம் வெளிக்கவில்லை. யாரென்று தெரியவில்லை.


முகத்தைத் துடைத்துக்கொண்டே வீட்டின் முற்பக்கத்திற்கு செல்கிறேன்.

“அது நானண்ணை, சிவராசன்... இரவு பதினொரு மணிக்கு அம்மா போயிட்டா, அது தான் என்னைப் பிடிச்சு விட்டவை...”

எனக்கு, கால்களுக்குக் கீழ் நிலம் சரிவது போல இருக்கிறது.

இனி என்ன? எல்லாம் முடிந்து விட்டது!

**ஜீவநதி 2012**


நிழல்



# நிழல்

மழை இன்னும் நன்றாகப் பெய்ய ஆரம்பிக்க வில்லை. சிறு தூறலாக சிணுங்கிக் கொண்டிருந்தது. தூரத்தே இடியின் ஓசை இடை இடையே கேடகிறது. எங்கோ நல்ல மழை பொழிந்து கொண்டிருக்கின்றது. இங்கும் அது போலப் பெய்ய வேண்டும். ஆனால், அதிகாலையி லிருந்தே அடை மழைக்கான அறிகுறி காட்டி விட்டு, மேக மூட்டம் கலைந்து கொண்டிருக்கின்றது.

பிள்ளைகளும் தாயுமாக, ஆளுக்கொரு குடையாக எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். குடைகளைத் தேடி எடுக்கும் வரை வீட்டை ஒரு முறை புரட்டி எடுத்து விட்டார்கள். எல்லோரும் போய்விட்ட பின், வீடு களை இழந்து போய் இருக்கின்றது,

எப்போதும் இப்படித்தான். தேவை என்று வரும் போது தான் ஒன்றைத் தேடுவார்கள். அதனை ஓரிடத்தில் ஒழுங்காக வைத்துப் பேண வேண்டும் என்ற அக்கறை எவருக்குமே இல்லை.

இப்போதெல்லாம் நான் மௌனமாகவே இருந்து விடுவேன். நான் ஏதாவது சொல்லப் போய் முறையாக "வாங்கிக் கட்டிக் கொண்டு"

அன்று முழுவதும் மனத்தாங்கலாக இருக்க நேர்ந்து விடக்கூடாதே என்ற அவதானம் என்னைத் தடுத்துவிடும்.

எல்லோரும் அவரவர் அவசரத்தில் சிறிது கடுப்பாகத்தான் இருப்பார்கள். வார்த்தைகளைக் குறைத்து உரசல்களைத் தவிர்த்துக் கொண்டால் மாலையில் எல்லோரும் திரும்பிய பின் வீடு கலகலப்பாகி விடும்.

இந்த ஞானம் எனக்கு இப்போது தான் பிறந்திருக்கின்றது. ஐம்பத்தைந்து வயதோடு உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின், வீட்டில் ஆற அமர இருந்து அனைத்தையும் அவதானிக்கின்றபோது தான் இவை எல்லாவற்றையும் ரசிக்கவும் முடிகின்றது.

“அவசரமும் அறியாமையும் தான் சகல கேடுகளுக்கும் காரணம்” என்று எப்போதோ படித்தது ஞாபகத்துக்கு வருகிறது. நிதானமும் பொறுமையும் ஒருங்கே வாய்க்கப்பெறும் இந்நிலையைத்தான் தபோநிலை என்று ஞானியர் உரைத்தனரோ?

இல்லை. தபோநிலைக்கு மன ஒடுக்கமும் அவசியம். என் மனம் தான் கடந்த கால நினைவுகளில் தாவிக் கொண்டிருக்கிறதே!.

மழை வரப்போகிறது என்ற செய்தியை முதலில் சொல்லி எல்லோருடைய அதிகாலைத் தூக்கத்தையும் குழப்பியது புவனம் தான். வழமைபோல் ஐந்து மணிக்கே எழுந்து முற்றம் கூட்டச் சென்றவள், கறுத்து இருண்டு கிடந்த வானத்தைத் தான் முதலில் பார்த்தாள்.

மழை கொட்டப்போகிறதே என்ற அவளின் அநுமானம் இனி ஒருவரையும் நித்திரை கொள்ளவிடப் போவதில்லை.

“இன்றைக்கு நல்லா மழைகொட்டப் போகுது...எல்லோரும் நேரத்துக்கே எழும்பி வெளிக்கிடுங்கோ”

வழமையாக அம்மா எழும்புகிற நேரத்துக்கே ஒருமுறை நித்திரை கலைந்து மீண்டும் ஆறு அல்லது ஆறரை மணிவரை நித்திரை கொள்கின்ற பிள்ளைகள் விசனப்பட்டார்கள்.

"மழை பெய்ஞ்ஞா பெய்யட்டும், கொஞ்சம் நித்திரை கொள்ள விடுங்கம்மா..."

பிள்ளைகள் புரண்டு படுத்தார்கள்

"இன்றைக்கு இரண்டு பேருக்கும் சோதினையு மெல்லே...இப்பவே எழும்பி நேரத்துக்கே வெளிக் கிட்டாத்தான் மழை இல்லாத நேரமாப் பார்த்து பள்ளிக்கூடம் போய்ச் சேரலாம்..."

பிள்கைகளுக்குத் தெரியும், இனி தொண தொணப்புத்தான் என்று. ஒன்றும் கேளாதது போல் பாசாங்கு செய்தார்கள்.

"உங்கடை உங்கடை குடை எங்கை இருக்கென்று தெரியுமே... எழும்பித் தேடி எடுங்கோ.... பிறகு பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகிட்டு தென்று நனைஞ்சு கொண்டு போகேலாது..."

முற்றத்தைக் கூட்டிக் கொண்டே புவனம் ஒவ்வொன்றாக ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

சின்னவனுக்குப் பொறுக்கவில்லை.

"இன்னும் மழை பெய்யக் காணேல்லை. ஏனம்மா ஆய்க்கினைப் படுத்திறியள்... மழை பெய்யப் போகுதென்றால் ஏன் கூட்டிக் கொண்டு நிக்கிறியள்..."

யாருமே தன்னை மடக்குவது புவனத்துக்குப் பிடிக்காது. அதிலும் என் முன்னிலையில் பிள்ளைகள் தன்னை மறுத்து ஏதாவது நியாயம் சொன்னால் அவளுக்கு ஆத்திரம்தான் வரும். தான் மட்டும் இந்த வீட்டில் மாடு மாதிரி வேலை செய்வதாகக் சொல்லிக் கொண்டு புறுபுறுக்கத் தொடங்கி விடுவாள்.

புவனம் சின்னவனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஏதோ புறுபுறுத்தாள்.

"நானென்ன வேலைவெட்டி இல்லாமல் சும்மா படுத்திருக்கிறனே..."

அம்மா இனி எல்லோரையும் விட்டு வைக்கமாட்டா என்பது பிள்ளை களுக்குத் தெரியும். படுக்கையிலிருந்து எழுந்து காலைக்கடன்களுக்குத் தயாரானார்கள்.

வானம் கறுத்துக் கிடந்து பயங்காட்டியதுபோல் மழை ஒன்றும் கொட்டவில்லை. சிறு துமியாகத்தான் தூற்றிக் கொண்டிருந்தது.

பிள்ளைகளும் தாயும் ஒருவாறு தங்களது குடைகளைத் தேடி எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

"அப்பா இன்றைக்குப் "பென்ஸன்" எடுக்கப் போகவேணுமெல்லே... நாலு லேடீஸ் குடையிலை இன்னும் ஒரு குடை இருக்குதெல்லே... அதையும் தேடி எடுங்கோவன்..."

என்னுடைய இன்றைய கடமையையும் புவனம் நாசூக்காகத் தெரிவித்துக் கொண்டாள்.

மூத்தவன் முந்திக்கொண்டான்.

"ஏன் அப்பாவுக்கு அப்பம்மாவின்ரை குடை இருக்குத்தானே..."

மூத்தவன் "அப்பம்மாவின்ரை குடை" என்று அடையாளப்படுத்தி யதும் மூன்றுபேரும் கலகலப்பாகச் சிரித்து குதூகலித்துக் கொண்டார்கள்.

"ஏன்ரா அந்தாளை நக்கலடிக்கிறியள்...

சைக்கிளுக்கு காத்து அடிச்சுப் போட்டியளே.. நானும் இன்றைக்குப் பள்ளிக் கூடத்துக்கு நேரத்துக்குப் போகவேணும்..."

அம்மாவின் அறிவுறுத்தல்கள் மீண்டும் வரிசையாய் கிளம்பப் போகின்றன என்ற எச்சரிக்கை உணர்வோடு பிள்ளைகள் தங்கள் தங்கள் சைக்கிள்களில் ஏறிப் போய்விட்டார்கள்.

"சாப்பாடு போட்டு மூடி வைச்சிருக்கிறன்... புட்டு காயமுன்னம் சாப்பிடுங்கோ..."

சொல்லிக் கொண்டு, புவனமும் தனது பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள்.

இன்னமும் மழை தூறிக்கொண்டுதான் இருக்கிறது. பெருமழை பெய்வதற்கான அறிகுறிகள் முற்றாக மறைந்து விடவில்லை. தூரத்தே விட்டுவிட்டு இடிமுழக்கம் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

மழையை ரசித்து அநுபவிக்கவேண்டும். ஆனால் என்னால் முடிவதில்லை.

பாடசாலை விடுமுறை நாட்களில் எல்லோரும் ஒன்றாக வீட்டில் நிற்கின்ற வேளைகளில் மழைபெய்யத் தொடங்கிவிட்டால், பிள்ளைகளும் தாயும் கூடத்து வாசலில் நின்று மழைபொழியும் அழகை ரசிக்கத்தொடங்கி விடுவார்கள். கூரையில் வீழ்ந்து கொண்டிருக்கும் நீர் பீலியில் சேகரமாகி, குழாய் வழியே நிலத்திற் கொட்டும் ஓசை கூட ஏதோ ஒரு லயத்தில் இசைப்பதாகத்தான் எனக்கும் தோன்றும்.

ஆனால், நெஞ்சின் ஒரு மூலையில் துருத்திக் கொண்டிருக்கும் மழைக்கால நிகழ்வுகளின் ஞாபகம் முந்திக் கொண்டு வந்து என் இருப்பை நினைவுறுத்தும்.

"மழை வா வெய்யில் போ... மழை வா வெய்யில் போ..."

பள்ளிப்பருவத்தில் மழை பெய்யத் தொடங்கி விட்டால் சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து மழைக்கு அளிக்கும் வரவேற்பில் பள்ளியே அதிரும். செல்லத்துரை மாஸ்ரர் வந்து பார்த்து விட்டு, "இன்னும் சத்தமாச் சொல்லுங்கடா" என்று உற்சாகப்படுத்தி விட்டுப் போவார். ஆனால் நான் மட்டும் மனதுள் கறுவிக்கொண்டிருப்பேன்.

செல்லத்துரை மாஸ்ரர் இரண்டு, மூன்று தடவைகள் என்னை அவதானித்திருக்க வேண்டும்.

"இவனென்னடா இப்பிடி இருக்கிறான்... நீயுஞ்சேர்ந்து அவங் களோடை சத்தம் போடனடா...?

மழை பெய்த ஒரு நாளில் செல்லத்துரை மாஸ்ரர் என்னை அழைத்து எனக்கு உற்சாகமூட்டினார்.

நான் உரத்த குரலில் கத்தினேன்.

"மழை போ வெய்யில் வா... மழை போ வெய்யில் வா..."

செல்லத்துரை மாஸ்ரருக்குக் கோபம் வந்தது.

"என்னடா ஏறுக்கு மாறா ஏதோ சொல்லுறாய்.."

செல்லத்துரை மாஸ்ரரின் பிரம்பு இரண்டு தரம் என் கையில் விளையாடியது.

இரவும் கூட என் கை சிவந்துதான் இருந்தது. அம்மா என் கையைத் தடவித்தடவி வாயால் ஊதிக் கொண்டும் இருந்தா. அம்மாவின் இறக்கைக்குள் இதமான சுகம் கண்டேன்.

"எங்களின் வலி எங்களோடு... இவர்களுக்கு எங்கே இது புரியும்..."

இந்த ஞானம் என்னுள் என்றோ ஆழப்பதிந்தது.

அப்போது எங்கள் வீடு ஒரு சிறு கொட்டில் தான். மழைக்கு கூரை ஒழுகும். ஒழுக்கில்லாத இடம் பார்த்து அம்மா பாயை விரித்து விட்டு ஓரத்தில் அக்காவை அதில் படுக்கவிட்டுவிடுவா. மறுஓரத்தில் தன் சீலைக்குள் என்னை மூடி அணைத்துக் கொண்டு படுப்பா. சிலவேளைகளில் ஏதோ மெதுவாகச் சொல்வா. அவை தொழிலுக்காக முல்லைத்தீவுக்குப் போயிருந்த ஐயாவுடன் பேசுவது போலிருக்கும்.

சிலவேளைகளில் கடும் மழைக்கு, கூரையைத் தாங்கி நிற்கும் கப்புகள் "பாறி"விடும். எங்களை நித்திரையாக்கிவிட்டு, பெரும் அச்சத்துடன் அம்மா விழித்திருப்பா. காலையில் எழுந்து, சிவந்திருக்கும் அம்மாவின் கண்களைக் காணும் போது, நித்திரை கொள்ளவில்லை என்பது எங்களுக்கு விளங்கும். காலையில் யாரையோ பிடித்து அம்மா கப்புகளைச் சரிசெய்து கொள்வா.

மழையினால் வீடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அறிந்து, அம்மா ஐயாவுக்கு கடிதம் எழுதிப்போடுவா. விடயம் அறிந்து ஐயா வீட்டில் நிற்கும் மூன்று நாட்களில் விதானை வீட்டுக்கு அலைந்து திரிவதோடு பொழுது போய்விடும்.

சேதங்கள் பார்க்கவென வரும் விதானையார் எங்கள் குடிலுக்கு எந்தச் சேதமும் இல்லையென பதிந்து கொண்டு போவார்.

கையடக்கத் தொலைபேசி அழைப்பொலி கேட்டதும் நினைவிலிருந்து மீண்டு, எழுந்துசென்று நோக்கினேன். புவனம் அழைத்தாள்.

“நீங்களும் நேரத்துக்குச் சாப்பிட்டுவிட்டு “பாங்”குக்குப் போய் வாங்கோ....”

வெளியில் மழை தூறிக் கொண்டுதான் இருந்தது. குடையைத் தேடி எடுக்க வேண்டும். புவனம் ஒழுங்கு மாற்றி வைக்காதிருந்தால், எனது குடை வைத்த இடத்திலேயே இருக்கும்.

பின் விறாந்தையிலுள்ள பரணில் என் குடை தெரிந்தது.

குடையை எடுக்கும்போதே, “அப்பம்மாவின்ரை குடை” என்று என் பிள்ளைகள் என்னைக் கேலி செய்வது நெஞ்சில் உறைக்கிறது. அது ஒன்றும் என் அம்மாவின் குடை இல்லை. நான் இன்னும் பேணிக்காத்துவரும் என் அம்மாவின் குடையை ஒத்தது. என் குடைக்குப் பக்கத்தில் அம்மாவின் குடையும் இருக்கிறது. மெதுவாக அதனை தடவிக் கொள்கின்றேன். அம்மாவின் மெலிந்த கையின் ஸ்பரிசம் என் மேனியில் ஊர்ந்து, மயிர்க்கால்களில் உறைந்து, என் ரோமங்கள் எல்லாம் குத்திட்டு நிற்கின்றன. என் கண்களில் நீர் நிறைகின்றது.

“உது ஒரு சென்ரிமென்ரல் ரைப்படா... இல்லாட்டில் உந்தப் பீத்தல் குடையை எடுத்துக் கொண்டு பொத்திப் பொத்தி வைச்சிருக்குதே...”

புவனம் நையாண்டியாகச் சொல்லும்போது பிள்ளைகள் குதூகலிப்பார்கள்.

அம்மாவின் குடையைத் தொடும் போதெல்லாம் ஆரம்பப் பள்ளியில் படித்த "குடையின் சுயசரிதை" என்ற பாடம் தான் நினைவுக்கு வரும்.

அம்மாவின் குடையும் சுயசரிதை சொல்ல ஆரம்பித்தால்...

எங்கள் வசதிக்கு அப்போது குடை என்பது ஆடம்பரப் பொருள்தான்... குடையின் தேவையை விட நாளாந்த தேவைகள் எங்களை நெருக்கும்.

ஐயா செய்து வைத்திருந்த மாட்டுத்தாள் கடதாசியினாலான தொப்பி சிறு தூறல்களைச் சமாளித்துக் கொள்ளும்.

மழைக்காலத்தில் ஐயா வீட்டில் நிற்கின்ற வேளைகளில் மாட்டுத்தாளில் மடித்து மடித்துச் செய்து வைத்திருக்கும் தொப்பிகள் அங்கங்கே வீட்டுத் தட்டியில் செருகி வைக்கப்பட்டிருக்கும். அக்கா பள்ளிக்குப் போகும்போது தூறலாக இருந்தால், அத்தொப்பிகளில் ஒன்றை அம்மா போட்டு விடுவா.

அப்போது அக்கா நாலாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கையில் நான் சின்ன முதலில் இருந்தேன். மழைநாளில் நான் பள்ளிக்கூடம் போவதே இல்லை.

அக்கா ஐந்தாம் வகுப்புக்கு வந்தபோது மற்றப்பிள்ளைகள் மாட்டுத்தாள் தொப்பியைப் பார்த்து கேலிசெய்யத் தொடங்கிவிட்டார்கள். அதன்பின்பு, வீட்டில் அம்மா போட்டு விடும் மாட்டுத்தாள் தொப்பியை, வழியில் செல்லும்போது கொப்பிக்குள் மறைத்து வைத்துக் கொண்டு, மழையில் நனைந்தோ அல்லது கொப்பியைத் தலையில் பிடித்துக் கொண்டோ பாடசாலைக்குப் போவதை அக்கா வழக்கமாக்கிக் கொண்டாள்.

ஒரு நாள் அக்காவுக்குக் காய்ச்சல் வந்த போதுதான் அம்மாவுக்கும் ஐயாவுக்கும் இது தெரிய வந்தது. பதறிப்போனார்கள்.

அடுத்த கிழமையே யாரிடமோ காசு மாறி, ஐயா புதுக்குடை வாங்கி வந்தார். முழுக்குடை மான் மார்க் குடை. அது தான் அப்போது பேர் பெற்ற குடை என்று ஐயா சொன்னார்.

அரைக்குடையாக வாங்கியிருக்கலாமே என்று அம்மா கேட்ட போது, முழுக்குடைதான் இருவரும் நனையாமல் பள்ளிக்கூடம் போக வசதியாக இருக்கும் என்று ஐயா விளக்கம் சொல்லிவிட்டார்.

அந்தக் குடையை அருமை பெருமையாகத் தான் நாம் பேணிப்பாதுகாத்து வந்தோம்.

மழைக்காலம் இல்லாத ஒருநாளில், வழமைக்கு மாறாக மத்தியானமே மழை பெய்யத் தொடங்கிவிட்டது. காற்றும் பலமாக வீசியது.

காலையில் மழைக்குறி ஏதும் தோன்றாதமையால் அக்காவும் நானும் குடையையும் எடுத்துச் செல்லவில்லை.

நான் "பெரிய முதல்" படித்துக் கொண்டிருந்தமையால் பன்னிரண்டு மணிக்கே எங்களுக்கு வகுப்பு முடிந்துவிட்டது.

என்னுடைய வகுப்பில் படித்த எல்லோரையும் யார் யாரோ வந்து கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். வழமையாக என்னைக் கூட்டிச் செல்ல வரும் அம்மாவையும் காணவில்லை.

எங்களுக்கு வகுப்பு முடியும் நேரம் அக்காவுக்கு இடைவேளை என்றபடியால் என்னோடு வந்து நின்றாள். இருவருக்கும் அம்மாவைக் காணவில்லை என்ற ஏக்கம்.

தூரத்தில் குடையையும் பிடித்துக்கொண்டு அம்மா வருவது தெரிந்தது.

மழைபெய்தால், அக்காவைப் பின்பு கூட்ட வருவதாகச் சொல்லிவிட்டு, அம்மா என்னை அழைத்து வந்தா.

தெருவெல்லாம் வெள்ளம்.

அம்மா ஒரு கையால் என்னைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு, மறு கையில் குடையைப் பிடித்தபடியே நடந்து வந்தா.

திடீரென்று பலமாக வீசிய காற்றில் குடையின் கம்பிகள் பின்புறமாக வளைந்து கொண்டன. ஒரு கையில் குடையைப் பிடித்துக்கொண்டு அம்மாவால் காற்றைச் சமாளிக்க முடியவில்லை. என்னைக்கீழே இறக்கி, தன் சீலைத்தலைப்பால் என் தலையை மூடிவிட்டு, இரு கைகளாலும் கம்பிகளை பழையபடி வளைத்து குடையைச் சீராக்கிக் கொண்டா.

ஆனால், பாவம்! காற்று இழுத்த இழுப்பில் ஒரு கம்பி நீளத்துக்குக் குடைச்சீலை கிழிந்துவிட்டது.

அம்மாவுக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

கண்களைத் துடைத்துக்கொண்டு, என்னையும் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு மெதுவாக நடந்தா.

இப்போது காற்றின் வீச்சுக்கு, கிழிந்த குடைச்சீலையின் இரு பக்கங்களும் சடசடக்கத் தொடங்கிவிட்டன. அம்மா சற்று வேகமாக நடக்கத் தொடங்கினா.

அதே நேரம் பார்த்து, செல்லத்துரை மாஸ்ரர் குடை பிடித்தபடியே சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் வழமையாக இடைவேளை நேரம் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வருபவர்.

எங்களைக் கண்டதும் அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

“என்னக்கா இது குடை... ஒரு புதுக்குடை வாங்குங்கோவன்...”

அன்று பின்னேரம் ஐயா வீட்டுக்கு வந்திருந்தார். கிழிந்த சீலையைத் தைத்து குடையைச் சீராக்கிக் கொண்டார்.

காலமாற்றத்தில், ஐயா எங்களுக்குப் பெற்றுத்தந்த கல்வியினூடாக நாங்கள் வளர்ந்ததும் நிமிர்ந்து நிற்கத் தொடங்கினோம்.

“பிச்சை புகினும் கற்கை நன்றே” என்ற முதுமொழி ஐயாவுக்கு வேதவாக்காக இருந்தது. மிகுந்த பிரயாசையுடன் அக்காவையும் என்னையும் எனக்குப்பின் பிறந்த தங்கச்சியையும் நன்கு படிக்கச் செய்து ஆளாக்கியும் விட்டார்.

ஐயா செய்த புண்ணியத்தை நாங்கள் அனுபவிக்கத் தொடங்கினோம்.

எங்கள் மூவருக்கும் உரிய காலங்களில் மணம் முடித்து வைத்து பேரப்பிள்ளைகள் சிலரையும் கண்டுவிட்டு, படுக்கையில் விழாமலே ஐயா போய்ச்சேர்ந்துவிட்டார்.

ஐயா போய்ச்சேர்ந்தும் இருபது வருடங்களுக்கும் மேலாக அம்மா எங்கள் குடும்பங்களைக் பிணைத்துக் கொண்டிருந்தா. தனித்தனியே வீடுகளைக் கட்டிக் குடியிருந்தாலும் அம்மாவின் அரவணைப்பில் எங்களிடையே பாசப் பிணைப்பு துளிர்த்துக்கொண்டே இருந்தது.

அம்மாவும் போனபின், எல்லாம் முடிந்து விட்டது.

அம்மாவின் நினைவாக என்னுடன் எடுத்துவந்திருந்த குடை இன்று எவரது கவனிப்புமற்றுக் கிடந்தது. அம்மா வீட்டிலும் அது நீண்ட காலமாகக் கவனிப்பாரற்றுத்தான் கிடந்தது. ஒரு மூலையில் தூக்கிப் போட்டிருந்த குடையை வீட்டுக்கு எடுத்துவந்தபோது என் மனைவியும் பிள்ளைகளும் கூட என்னைப் பரிகாசம்தான் செய்தார்கள்.

யாருக்குத் தெரியும், அந்தக் குடையில்தான் என் உயிர் உள்ளதென்று...

மீண்டும் கைத்தொலைபேசி அழைப்பில், நினைவிலிருந்து மீண்டேன். எனக்குக் கட்டளை பிறந்தது.

“இன்னும் “பாங்”குக்குப் போகேல்லையே... மழையும் விட்டுட்டுது. போங்கோவன்...”

நான் என் குடையை எடுத்துக் கொள்கிறேன்.

அம்மாவின் குடையைப் போன்று மான்“மார்க்” முழுக்குடையை எனக்கென்று ஒருநாள் வாங்கி வந்தபோது, புவனம் பிள்ளைகளுக்குச் சொன்னாள்.

“இது பழைய பஞ்சாங்கமடா...”

என் குடையை விரிக்கும் ஒவ்வொரு வேளையிலும் அம்மாவின் குடையும் ஐயாவின் பிரயாசையும் நினைவுக்கு வந்து எனக்கு உயிர்ப்புத் தருவது இவர்களுக்கு விளங்காது தான்.

என் குடையை மெல்ல விரித்துப் பார்க்கிறேன்

எனக்கு திகைப்பாக இருக்கிறது.

என் குடைச்சீலையை எலி நன்றாகப் பதம் பார்த்திருந்தது. பரபரப்புடன் அம்மாவின் குடையை விரித்துப் பார்க்கிறேன்.

நல்லவேளை! ஐயா போட்ட தையலுடன் குடை அப்படியே இருக்கிறது.

அம்மாவின் குடையை எடுத்து வந்து என் அறையில் அலுமாரிக்குள் வைத்துப் பூட்டிக் கொள்கிறேன்.

வெளியில் மழைத்தூறல் நின்றுவிட்டது. வானமும் வெளிப்புக் காட்டியது.

“பாங்” புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு புறப்படுகிறேன்.

மழை என்பதால் “பாங்கில்” அதிக கூட்டமில்லை. “பென்ஸனை” எடுத்துக்கொண்டு வெளியேறக் காலடி எடுத்துவைத்தபோது “சடசட” என பெருந்துளியாக மழை பெய்யத்தொடங்கியது.

திடீரென்று வானம் கறுத்து, மழை பொழிந்து கொண்டிருந்தது. அம்மாவின் குடையை என்றாலும் எடுத்து வந்திருக்கலாமே என்று மனம் அங்கலாய்த்தது.

நேரம் பன்னிரண்டு மணியைக் கடந்து விட்டது. மழை விட்டபாடா யில்லை. “சோ” எனப் பெய்து கொண்டிருந்தது.

நான் தனித்துவிடப்பட்டது போன்ற உணர்வில், ஏக்கம் என்னைச் சூழ்ந்துகொள்கிறது.

“பாங்” உத்தியோகத்தர்களின் வாகனங்களின் தரிப்பிடமாக உள்ள அந்த தகரக்கொட்டகையின் தாழ்வாரத்திலும் தான் குளிரில் எவ்வளவு நேரமென்று நிற்பது.

வீதி நீளத்துக்கு எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. வாகனங்களின் போக்குவரத்தும் குறைவாக இருக்கிறது.

திடீரென, பனிமூட்டம் போலத் தெரிந்த மழையின் பின்புலத்தில் விரிந்த திரையில்...

அம்மா வந்து கொண்டிருந்தா... குடையையும் பிடித்துக் கொண்டு முகத்தின் களை மாறாமல் ... என்னை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தா.

என்னால் நம்பமுடியவில்லை.

கண்களைக் கசக்கிக்கொண்டு, மீண்டும் உற்றுப் பார்க்கின்றேன்.

சந்தேகமே இல்லை, அம்மா தான்!

என்னுள் இனந்தெரியாத பரவசம்... இந்த உணர்வு நிலையில் கரைந்து, “அம்மா, அம்மா... என் அம்மா அம்மாதான்...” என்று முணுமுணுத்துக் கொள்கிறேன்.

கைத்தொலைபேசி நேரம் காலம் தெரியாமல் ஒலித்தது. கையிலெடுத்துக் காதில் வைத்தேன்.

“எங்கை நிக்கிறியளப்பா... சின்னவனுக்கு ஒரு பாடத்தோடை பன்ரெண்டு மணிக்கு இன்றைக்குச் சோதினை முடிஞ்சிடும் என்று சொன்னவன்... மழைகொட்டுது... குடையும் பிடிச்சுக் கொண்டு சைக்கிள் ஓடமாட்டான்.. ஒரு ஓட்டோவைப் பிடிச்சுக்கொண்டு போய், சைக்கிளைப் பள்ளிக்கூடத்திலை விட்டுப் பூட்டிப் போட்டு, அவனைக் கூட்டிவாங்கோ...”

பிள்ளைகள் அதை விரும்பமாட்டார்கள் என்பதைப் புவனத்திற்கு எப்படி எடுத்துச் சொல்வதென்று தயக்கமாக இருக்கிறது.

பிள்ளைகள் சின்னப்பிள்ளைகளில்லை. பதினோராம் வகுப்பிலும் உயர்தரவகுப்பிலும் படித்திக்கொண்டிருப்பவர்கள். ஓட்டோவில் நான் போய் இறங்கினால் என்னை ஏசப்போகிறார்கள்.

“என்னப்பா ஒன்றும் பேசாமலிருக்கிறியள்.... எனக்கு இங்கை இருப்புக் கொள்ளுதில்லை.... நீங்கள் போகாட்டில் சொல்லுங்கோ, நான் “சோர்ட் லீவு” போட்டிட்டு ஓட்டோவிலை போயிட்டு வாறன்....”

இப்போது, அம்மா குடையுடன் தெரிந்த மழைத் திரையைப் பார்க்கிறேன்.

அங்கு அம்மா இல்லை. குடையுடன் புவனம் தெரிந்தாள்.

**– ஜீவநதி 2012**

# தந்தையரும் தனயரும்





# தந்தையரும் தனயரும்

மனம் விசனித்து அரற்றியது.

சே! என்ன வாழ்க்கை இது?

ஓடி ஓடி யந்திரம் போல் ஆகிவிட்டதில் மரத்துப்போன உடலம்... மரத்துப்போன உடலில் மக்கிப்போன உணர்வுகள்... சிந்திக்கத் திராணி யற்று நாளாந்த கட்டளை நிரற் கடமைகளுள் முடங்கிப்போன உள்ளம்...

என்னையே நொந்து கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? இல்லை யென்றால் பிள்ளையின் பிறந்த தினம் கூட மறந்துபோகுமா?

சுதர்சனின் மலர்ந்த முகமும் விரிந்த விழிகளும் தான் இப்போது என் கண்முன்னால்...

என் அணைப்பில் அப்படி என்ன சுகத்தைக் கண்டான்?

ஒரு முறை தான்.

நேரம் போய்க்கொண்டிருக்கின்றதே என்ற அவசரத்தில், "இன்றைக்கு நேரத்துக்கு

வந்திடுங்கோ" என்ற சுதாவின் வார்த்தை களையும் காதில் போட்டதும் போடாததுமாக, சுதர்சனை இழுத்தணைத்ததோடு சரி...

அவசரமான ஓட்டப்பந்தயத்தில் ஸ்ரேசனை நோக்கி ஓடிக்கொண்டி ருக்கும்போது சுதர்சனின் குரலை வாங்கிக் கொண்டேனோ என்னவோ...

"Thank You Dad!"

இப்போது இந்த ரயில் பெட்டியில் அமர்ந்து, வீட்டைப் பற்றிச் சற்றுச் சிந்திக்கும்போது தான் சுதர்சனுக்காக என் மனம் இரங்குகிறது.

"நேற்றைய தினம் சுதர்சனுக்கு எவ்வளவு ஏமாற்றமாய் இருந்திருக்கும்?"

இரவு முழுவதும் நித்திரை இல்லாமல் புரண்டு புரண்டு படுத்தது சுதாவுக்கும் தெரியும்.

"வேலை என்றால் என்ன செய்யிறது... கிடைக்கிற ஓவர் ரைமை விடேலாது தானே... சுதர்சன்ரை பிரெண்ட்சும் நின்று தான் கேக் வெட்டினவை. சுதர்சனுக்குத் தெரியும். அப்பாவுக்கு விட்டிட்டு வரேலாத வேலை என்று... சந்தோசமாத்தான் நின்றவன்..."

சுதா எனக்குச் சமாதானம் சொன்னாலும், என் மனம் இப்போது அமைதி இன்றி அலைந்து கொண்டிருக்கின்றது.

"வீட்டைப் பற்றி யோசித்திருந்தால் ஓவர் ரைமை வேண்டாமென்று சொல்லிவிட்டு நேரத்துக்கே வீட்டுக்குப் போயிருக்கலாம்..."

என் மனம் குற்றவுணர்வில் உழல்வது என் அந்தராத்மாவுக்குப் பிடிக்கவில்லைப் போலும், விழித்துக்கொண்டது.

"உன்ரை வீட்டுக்காயும் உன்ரை உறவுகளுக்காயும் தானே இப்பிடி ஓடி ஓடி உழைச்சுக் கொண்டி ருக்கிறாய்..."

என் மனம் ஒத்துக்கொள்ளவில்லை.

"பிள்ளைக்கும் சின்னச்சின்ன விருப்புகள் இருக்கும் தானே... நிறைவேற்ற வேண்டியது தந்தையின் கடமை அல்லவா? "

என் அந்தராத்மா என்னைக் குறுக்கு விசாரணை செய்தது.

"நீ வெளிநாட்டுக்கென்று ஏன் ஓடிவந்தாய்?"

"நீ ஓடி ஓடி உழைக்காமல் இருந்திருந்தால் உன் சகோதரியளுக்குக் கலியாணம் நடந்திருக்குமா?"

"அவையளுக்கெல்லாம் செய்தது போக இனி உனக்காக, உன் குடும்பத்துக்காக நீ மாய்ஞ்சு மாய்ஞ்சு உழைக்கத்தானே வேண்டும்... உன் மனைவியும் பிள்ளையும் கூட கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளத் தானே வேண்டும்..."

என் அந்தராத்மா எனக்காக வாதாடினாலும் என்னைக் குற்றக் கூண்டிலிருந்து விடுவிக்க முடியவில்லை.

இரவு தூக்கத்திலிருந்த சுதர்சனை இழுத்து இழுத்து அணைத்த போதிலும், அவன் தூக்கக் கலக்கத்திலிருந்து விடுபடாமல் சுருண்டு படுத்ததும் நினைவுக்கு வந்து என்னை அரிக்கிறது.

"இனியும் ஏன் கவலை... இன்றைக்கு நேரத்துக்குப் போய் குடும்பத்தோடை குதூகலிக்கத் தானே போறாய்..."

என் அந்தராத்மா மீண்டும் விழித்துக்கொண்டு, என்னை உற்சாகப்படுத்தியது.

மனம் ஆறுதலடைந்து, நான் உலகின் அழகை ரசிக்கத் தொடங்கினேன். ரயில் சிட்னி ஸ்ரேசனைத் தொட்டது.

நான் இருந்த பெட்டிக்குள் ஏறிக்கொண்ட அவர்கள் இருவரையும் கண்டபோது எனக்கு வியப்பாக இருந்தது.

ஒரு பெண்ணும் அவளது கையைப் பிடித்தவாறே ஒரு சிறுவனும்

எனது "சீற்"றையும் கடந்து சென்று, இரண்டு "சீற்" தள்ளிப்போய் அமர்ந்து கொண்டனர். என் இடத்திலிருந்து அவர்களை நன்றாகப் பார்க்க முடிந்தது.

அவள்–

எங்களூரில் சொல்வதுபோல, மர எண்ணை நிறக்கறுப்பி. குட்டையான தலைமயிரிலும்கூட ஐந்து பின்னல்களை முறுக்கி முறுக்கிப்போட்டிருந்தாள்.

அவள் ஒரு "அபொறிஜின்" என்று அவள் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.

அந்தச் சிறுவனோ–

அழகாக இருந்தான்.

ரயிலில் ஏறியது முதல் அச்சிறுவன் தாயை ஆங்கிலத்தில் நச்சரித்துக் கொண்டிருந்தான்.

"அப்பா எப்போ வருவாரம்மா?"

இன்னும் இரண்டு ஸ்ரேசன் போனதும் வந்துவிடுவார் என்று அலுக்காமல் பொறுமையாக அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாள். சொல்லும் போதே அவனைத் தடவிக் கொடுத்து, இடைஇடையே இழுத்தணைத்துக்கொள்வதுமாக இருக்கிறாள்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

"இந்த கறுப்பிக்கு இப்படி ஒரு அழகான குழந்தையா?"

அச்சிறுவன் பளபளப்பான வெள்ளைத் தோலுடன் "துறு துறு" என்று இருந்தான். வாய்க்குள்ளே முணுமுணுக்கும் அவுஸ்திரேலியர்கள் போலன்றி, ஆங்கிலத்தில் வார்த்தைகளை அழகாக உச்சரித்தான்.

தாயும் மகனும் பேசிய பேச்சுகளிலிருந்து, தொழிலுக்குப் போன அவன் தந்தை இன்னும் இரண்டு ஸ்ரேசன் கழிந்ததும் அடுத்துவரும் ஸ்ரேசனில் அவர்களுடன் இணைந்துகொள்வான் என்று தெரிந்தது.

அவள் சொன்னது போல, குறித்த ஸ்ரேசனில் அவன் ஏறிக் கொண்டான். ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டே வந்த அச்சிறுவன் தனது தந்தையைக் கூவி அழைத்து கை அசைத்ததன் மூலம், தாங்கள் இருந்த பெட்டிக்கு வரவழைத்துக்கொண்டான். தந்தையின் கால்களைக் கட்டி அணைத்துக் கொண்டு "டாட்" என்று இழுத்தான்.

அவன் தந்தையோ மகனின் தலையில் செல்லமாகத்தட்டி விட்டு, அவளையும் இழுத்து ஒருமுறை அணைத்துக் கொண்டான். அதன் பின்பு வாய் ஓயாமல் அவளுக்கு என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான். இடை இடையே அவளின் தலையை வருடிக்கொடுத்துக்கொண்டிருந்தான்.

நான் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கட்டான உடல்வாகு.

சுண்டினால் இரத்தம் சொட்டும் சிவந்த மேனி.

கைகளிலும் புஜங்களிலும் வெளித்தெரியும் உடல் முறுக்கு.

மொத்தத்தில் குத்துச் சண்டைவீரன் போல இருந்தான். நல்ல உழைப்பாளி போலும்.

"அவனுக்கும் என்ன பிரச்சனையோ?"

இடைநிறுத்தாமல் அவன் சொல்லச் சொல்ல, அவள் இடை இடையே முறுவலித்துக் கொண்டிருந் தாள்.

அந்தச் சிறுவனுக்கு இது ஒன்றும் புதிதில்லைப் போலிருக்கிறது. பெற்றோரைக் கவனியாதவனாக ஜன்னலுக்கூடாகத் தெரியும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். இடைஇடையே தான் ரசித்த அபூர்வக் காட்சிகளைப் பார்க்குமாறு, "டாட், லுக் தெயர்" என்று தந்தையைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தான். ஆனால், இவன் தந்தையோ "ஜோன், சத்தம் போடாமலிரு" என்று அவனை அதட்டி விட்டு, தன் கதையிலேயே கண்ணாக இருந்தான்.

சிலவேளைகளில் தந்தையின் அதட்டலில் ஜோன் வாட்டமுற்றது தெரிந்தது. ஒரு கணம்தான். அடுத்த கணமே அவன் மகிழ்ச்சியுடன் காட்சிகளை ரசித்தவாறே மீண்டும் மீண்டும் தந்தையைக் கூவி அழைத்துக் கொண்டும் இருந்தான்.

ரயில் அடுத்த ஸ்ரேசனை அண்மித்துக் கொண்டிருந்தது. ஜோன் எதையோ கண்டு விட்டு, மீண்டும் சத்தமாகத் தந்தையை அழைத்தான்.

தந்தை கோபித்துக்கொண்டு எழுந்து மகனின் தலையில் பலமாகக் குட்டினான். அச்சிறுவனுக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

நான் அதிர்ந்து போனேன்.

“தனது குழந்தையின் சந்தோஷத்தைக் கூடப் பொறுக்காத இவன் என்ன மனிதன்?”

அவளும் அதிர்ந்துபோயிருக்கவேண்டும். ஜோனை இழுத்தணைத்து தலையைத் தடவிக் கொடுத்தாள்.

அவன் சற்று நேரம் முகத்தைக்கடுப்பாக வைத்திருந்து விட்டு, பின்பு ஜோனின் தலையைச் செல்லமாக உலுப்பினான். ஸ்ரேசனில் தரிப்பதற்காக ரயில் வேகத்தைக் குறைத்துக்கொண்டபோது, அவன் பரபரப்பானான். ரயில் நின்றதும் நிற்காததுமாக “பிளாற்போமைத்” தொட்டுக் கொண்டபோது, அவர்கள் இருவரையும் ஒரு முறை இழுத்தணைத்துவிட்டு, அவன் ரயிலிலிருந்து இறங்கி விரைந்தான். “அப்பா மற்றோரிடத்துக்கும் வேலைக்குச் சென்றுவிட்டு இரவுக்குத் திரும்பிவிடுவார்” என அவள் தன் மகனுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டாள். தன் தந்தை சென்ற திக்கை நோக்கி ஜோன் கையசைத்துக் கொண்டிருந்தான்.

“ஓ! இவனும் என்னைப்போல் இரண்டு “ஷிப்ற்” வேலை செய்பவன் போலும்”.

ஜோனுக்காக என் மனம் இரங்கியது. தந்தையின் அன்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் ஜோனைப் போல இன்னும் எத்தனை குழந்தைகள்

ஏங்கிக் கொண்டிருக்கிறார்களோ.

இப்போது என் மகன் சுதர்சனின் முகம் தான் என் கண்ணில் நிறைந்திருந்தது. "அவுஸ்திரேலியா வந்த பின் உழைப்புத்தான் முக்கியம்" என்று ஓடிக் கொண்டிருக்கும் என்னைச் சிலநாட்களில் என் மகன் காண்பதே இல்லை என்ற உண்மை என்னை அரித்துக் கொண்டிக்கிறது.

இன்று நேரத்துக்கே வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து ஒரு "ஷிப்ற்" வேலை செய்து விட்டு, சுதர்சனுடன் மாலைப்பொழுதைக் கழிப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறேன்.

இன்று மதிய உணவை என் மனைவியுடனும் என் மகனுடனும் ஒன்றாகச் சாப்பிடப்போகிறேன் என்ற உணர்வு எனக்குக் குதூகலத்தைத் தந்தது.

ரயில் ஸ்ரேஷனில் இறங்கி அருகாகவே உள்ள பாதை வழியே நடந்து சென்று வீட்டை அண்மிக் கின்றேன்.

என் மனைவி, வாசலுக்கு வந்து என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள். "சுதர்சன் என்ன செய்கிறான்?" என்று கேட்டுக்கொண்டே வீட்டினுள் வருகிறேன்.

சுதர்சன் பாடசாலையிலிருந்து இன்னும் திரும்பி வரவில்லை. என்மேசையின்மேல் கடித உறையொன்று அழகாக அலங்கரிக்கப்பட்டு, அதன் முகப்பில் "FATHERS' DAY" என்று அழகாக எழுதப்பட்டிருக்கிறது. கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் படிக்கிறேன்.

முத்து முத்தான கையெழுத்தில் சுதர்சன் ஆங்கிலத்தில் எழுதியிருந்தான்:

Dad Thank You. You cuddled me yesterday. I like it .

கூட நின்ற மனைவி சுதர்சனின் வசனங்களை மீண்டும் அழுத்திக் கூறினாள்.

“பார்த்தீங்களே… இன்று “பாதேஸ் டே” என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு என்னிடம் காசு வாங்கி இந்தக் கார்ட்டையும் வாங்கி அழகு படுத்தியிருக்குது. நேற்று நீங்கள் கட்டியணைத்ததும் தனக்கு நல்ல விருப்பமாம். அதுக்கு நன்றியும் சொல்லியிருக்கிறான்.”

இவள் சொல்லிக்கொண்டிருக்க, எனக்கு ஏனோ ஜோனின் ஞாபகம் வந்தது.

**யாதும் 2011**


அக்கினிக்குஞ்சு



# அக்கினிக்குஞ்சு

ஊரில் பரபரப்புத் தெரிந்தது.

ஊரிலுள்ள ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களைத் தாமே வகுத்துக் கொண்டு சகல ஆயத்தங்களிலும் ஈடுபட்டிருந்தனர். ஊரிலுள்ள சகல தெருவோரங்களிலுமுள்ள புல் பூண்டுகளைச் செதுக்கிச் செப்பஞ் செய்து, வீதியின் இருமருங்கிலும் மாவிலை தோரணங் களால் அலங்கரித்து... ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஆலய பரிபாலன சபையினர் பெரு மிதத்தில் மிதந்தனர் தமது பெருமுயற்சியின் பயனாகவே இந்த அரிய சந்தர்ப்பம் கிடைத் திருக்கிறது எனப் பறை சாற்றும் வகையில், இந்த ஒரு கிழமையிலேயே இரு பொதுக்கூட்டங்களை நடத்தி, தமது திட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வுள்ள ஏற்பாடுகளையும் பிரகடனப்படுத்தி இருந்தனர்.

ஆலய பரிபாலன சபைத்தலைவர் சைவ சமாஜத்திற்கு அடிக்கடி சென்று வந்தார். சைவசமாஜத்தினர் திட்டவட்டமாக எதனையும் தெரிவிக்காதிருந்தனர். அடிகளார் ஒரு நாள் மாத்திரமே சமாஜத்தில் தங்கவுள்ளதால், நெருக்கடியான நிகழ்ச்சி நிரலுக்கு மத்தியில்,

விண்ணப்பித்திருந்த எல்லா ஆலயங்களுக்கும் அடிகளார் சென்று வருதல் சாத்தியமாகுமா என்ற ஐயப்பாட்டையும் அவர்கள் எழுப்பி யிருந்தனர். ஆனாலும், ஆலய பரிபாலன சபைத்தலைவர் தொடர்ந்து சமாஜத்திற்கு அடிக்கடி சென்று கொடுத்த நச்சரிப்பைச் சமாளிக்கும் வகையில், அப்படி நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதாயின் "அங்கு வர அஞ்சு அல்லது அஞ்சரை மணியாகி விடும்; அதேவேளை, ஆறு மணிக்குள் அடிகளார் சமாஜத்திற்கு திரும்பி விடவும் வேண்டும்" என்ற முன் நிபந்தனைகளையும் விதித்திருந்தனர்.

ஆலய பரிபாலன சபையினர்க்கு ஒரு துருப்புச்சீட்டுக் கிடைத்து விட்டது.

அதனைத் தமக்கு சாதகமாக்கி, சரியாக ஐந்து மணிக்கு தமது ஆலயத்திற்கு அடிகளார் வருகை தருவார் என்று நேரமும் குறித்து, அடிகளாரின் படத்துடன் பெரிய சுவரொட்டிகளும் அச்சடித்து, அப்பிரதேசத் தின் மூலை முடுக்குகளில்லாம் ஒட்டவும் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

சின்னராஜன் மட்டும் இவை எவை பற்றியும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்தான். ஏனெனில், அடிகளார் தமது ஊர் ஆலயத்திற்கும் வருகை தருவார் என்பதான செய்தி அவனுக்குத் தான் முதலில் கிடைத்திருந்தது. அடிகளார் தன் கைப்படவே கடிதம் எழுதி இவனுக்கு அனுப்பியிருந்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு பத்திரிகைச் செய்தியொன்றில் சைவசமாஜத்திற்கான அடிகளாரின் வருகை பற்றிய செய்தியொன்றைப் படிக்க நேர்ந்த போது, தமது ஊர் ஆலயத்திற்கும் அடிகளார் வருகை தர வேண்டும் எனவிண்ணப்பித்து அப்போதே கடிதமொன்றை அடிகளாருக்கு சின்னராஜன் அனுப்பியிருந்தான்.

அடிகளாரைப் பற்றி முன்பே பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் படிக்கக் கிடைத்த தகவல்களும், இந்திய வானொலிகளில் சில பட்டி மன்றங்களில் தலைமை வகித்து அடிகளார் வழங்கிய தீர்ப்புக்களும், அடிகளார் மீது அளவற்ற ஒரு பற்றுதலை சின்னராஜனிடத்து ஏற்படுத்தியிருந்தன. இப்படியான அடிகளார் பலர் இந்த நாட்டில் உருவாகி, சமயத்தின் பேரால் விதைக்கப்படும் மூடநம்பிக்கைகளையும் பழைமை வாதச் சிந்தனைகளையும் தகர்க்க வேண்டுமென சின்னராஜன் விரும்பியிருந்தான்.

தனக்குச் சமய நடைமுறைகளில் அதிக நம்பிக்கை இல்லை என்றும், சமயத்தின் பெயரால் நிலவுகின்ற சில நடைமுறைகளை நிறுத்தி ஊர்மக்களை நெறிப்படுத்த அடிகளாரின் வருகை அவசியமானது என்றும் திறந்த மனத்தோடு சின்னராஜன் எழுதிய கடிதம் அடிகளாருக்குப் பிடித்துப் போய்விட்டது. தான் கடிதம் எழுதியமை பற்றி எவருக்கும் தெரிய வேண்டாம் என்று சின்னராஜன் கேட்டுக் கொண்டதற்கிணங்க அடிகளாரும் இது பற்றி எவருக்கும் அறிவிக்காதிருந்தார். ஆனால், அந்த ஆலய வரலாறு பற்றியும் இன்று நடைமுறையிலிருக்கும் முரண்பாடான நடவடிக்கைகள் பற்றியும் எழுதி அனுப்புமாறும் சின்னராஜனிடம் கேட்டு எழுதியிருந்தார். சின்னராஜன் சுருக்கமாக அவற்றை எழுதி அனுப்பியிருந்தான்.

***

சிவலைக்கிழவன் இன்று கோவிலுக்குப் புறப்படும் போது சூரியன் உச்சிக்கு வந்து விட்டான்.

முழங்காலுக்கு மேல் நிற்கக் கட்டிய துண்டுச் சால்வையும் ஒரு கையில் செம்பும் மறுகையில் பூக்கூடையுமாக சிவலைக்கிழவன் கிளம்பி விட்டாரென்றால் நேரம் பத்து மணி என்று சொல்லக் கூடிய ஒரு காலமிருந்தது. ஆனால் இன்றோ, முதுமையின் தளர்ச்சி அன்றாட வேலைகளையே ஆறப்போடச் செய்தது. என்றாலும் சிவலைக்கிழவன் தனது நாளாந்த கடமைகளிலிருந்து தவறியதே இல்லை.

சிவலைக்கிழவனை எல்லோரும் "அப்பு" என்று தான் அழைத்தனர். சிவலைக் கிழவன் "சைவம்" ஆக இருப்பதும் உண்மையான ஆசார சீலராக விளங்குவதும் தான் அவர் மீது எல்லோரையும் மதிப்புக் கொள்ளச் செய்தன.

அண்ணமார் ஆலயமாக இருந்த இந்த ஆலயத்தில் ஞான கணபதியைப் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் முடித்து அலங்கார உற்சவ விழாக்களை நடத்தியபோது பத்துப்பூசைகளுக்குமுரிய சங்கற்பகாரராக சிவலை அப்புவைத் தான் பரிபாலனசபை ஏகமனதாகத் தீர்மானித்தது. நீண்ட காலமாக சிவலை அப்பு தான் சங்கற்பகாரர். ஆனால், நாளடைவில் இந்த நடைமுறை மாற்றம் கண்டது.

ஒவ்வொரு திருவிழாகாரரும் தங்கள் திருவிழாவைச் சேர்ந்தவர்கள் தான் சங்கற்பம் செய்ய வேண்டுமென, கூடித் தீர்மானித்தனர். தங்கள் திருவிழாக்காரருள்ளும் முறைவைத்துக் கொண்டு ஒவ்வொரு

வருடமும் சங்கற்பகாரரை மாற்றிக் கொண்டனர். யார் சங்கற்பகாரராக நிற்பது என்பதில் தங்களுக்குள் பிணக்குப்பட்டுக் கொண்டுமிருந்தனர்.

சிவலை அப்பு எதனாலும் பாதிப்புக்குள்ளாகாமலிருந்தார். தானுண்டு தன் தொழிலுண்டு என்றிருந்ததோடு மட்டுமல்லாமல் நித்தமும் கோயிலுக்குச் சென்று ஞானகணபதியைத் தன் மன, மொழி, மெய்யால் துதித்தும் வந்தார்.

சிவலை அப்பு எந்தப்புறச்சூழலாலும் பாதிக்கப்படாமலிருந்தாலும் கூட சின்னராஜனின் நினைப்பு மட்டும் அவரை இடையிடையே நெருடிக் கொண்டிருக்கும். பிறந்த வீட்டுக்குள்ளேயே தாயைத்தின்று விட்டு நின்ற சின்னராஜனை சிவலை அப்புவும் மனைவியும் தான் வளர்த்து ஆளாக்கினர். பேரக்குழந்தையின் கல்யாணம் காட்சியைக் காணாமலே தன் மனைவியும் போய்ச் சேர்ந்து விட்டது சிவலை அப்புவுக்குக் கவலையைத் தந்தாலும் சின்னராஜனை எந்தக் குறையுமின்றித் தான் பார்த்து வந்தார்.

சின்னராஜன் பாடசாலைக்கல்வியை முடித்துக் கொண்டு பரீட்சைகளிலும் நல்ல சித்திபெற்று உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்து விட்டு, பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தான். சமையல் பழகி, வேளா வேளைக்கு அப்புவுக்கும் தனக்குமென சமையல் செய்து கொண்டுமிருந்தான்.

சிவலை அப்பு இன்று கோயிலுக்கு புறப்படும்போது கரப்புக் கூட்டினால் மூடிவைக்கப்பட்டிருந்த சமையற் பாத்திரங்களை திறந்து பார்த்திருந்தார். பிட்டு அவித்து வைக்கப்பட்டிருந்தது. சின்னராஜன் சாப்பிடாமல் எங்கோ போயிருந்தான். இன்று வெள்ளிக்கிழமை. வெள்ளிக் கிழமைகளில் கோயிலின் பின் வீதியில் மூலஸ்தானத்திற்கு நேராக அமர்ந்திருந்து நீண்ட நேரமாக மௌனப்பிரார்த்தனை செய்து, வீட்டுக்குத் திரும்பிய பின் தான் சிவலை அப்பு காலை உணவை உட்கொள்வது வழக்கம்.

சிவலை அப்பு கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது வாய் கந்தரனுபூதியை முணுமுணுத்ததெனினும் தன் பேரன் இன்னும் சாப்பிடவில்லை என்ற எண்ணம் எழுந்து நெஞ்சை வருடியது.

இழுபறிப்படும் மனதை இழுத்து வந்து ஒருமுகப்படுத்தும் நோக்கில், "ஆடும் பரிவேலணி சேவலென..." என்று சற்று வெளியே கேட்கும்படியே சிவலை அப்பு சொல்லத் தொடங்கினார்.

வழியில் எதிர்பட்ட ஒரு சிலர் "அப்பு" என்று அழைத்து மரியாதை யாக ஒதுங்கிப் போகும்போது, தலையை நிமிர்த்தித் தனது பார்வை யினாலேயே அவர்கள் காட்டும் மரியாதையை அப்பு ஏற்றுக்கொண்டார்.

கோயிலை நெருங்கும்போது, ஆலய வெளிச்சுற்றுப்பிரகாரத்தை துப்புரவு செய்து கொண்டு சின்னராஜனும் அவனோடொத்த இளைஞர்களும் காணப்பட்டனர்.

சிவலை அப்புவுக்கு மனம் நிறைந்தது. தனது பேரன் இன்றைய தினம் ஆலயத்திருப்பணியில் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார். இந்த மகிழ்வோடு இறைவனை நினைத்து மனம் கசிந்து, உட்பிரகாரத்தின் பின்புறத்திற்குச் சென்று மூலஸ்தானத்திற்கு நேராக அமர்ந்து ஞான விநாயகனைத் தியானிக்கத் தொடங்கினார்.

***

எடுத்த எடுப்பிலேயே பஜனை களைகட்டத் தொடங்கிவிட்டது.

"ஞானவிநாயகா வரம் தருவாய் – பெரும்

பானைவயிற்றுடனே ஞாலம் வலம் வந்த"

பல்லவியை சங்கதிகள் வைத்து சங்கீத பூஷணம் பாடிக் கொண்டி ருந்தார். அவரைத் தொடர்ந்து அவரோடு கூடியிருந்த அடியார்கள் பாடினர்.

ஓர் அடியை உச்சஸ்தாயியில் சங்கீதபூஷணம் பாடும்போது, ஏனைய அடியார்கள் அதே அடியைக் கீழ்ஸ்தாயியில் பாடிக் கொண்டிருந்தனர். மொத்தத்தில் பல்லவி எடுப்பு கச்சிதமாகவே அமைந்திருந்தது.

மணியகாரன் தூணோரமாக நின்று கொண்டு பஜனையைக் கேட்டுத் தலை ஆட்டிக் கொண்டிருந்தார். இடுப்பில் கட்டியிருந்த "பெல்ற்"இல் சாவிக் கொத்து தொங்க விடப்பட்டிருந்தது. இடையிடையே அலுவல்களைக் கவனிக்கப் போய் வருபவர் போல குறுக்கும் நெடுக்கும் நடைபயின்று கொண்டும் இருந்தார்.

தலைவர் உட்பட ஆலய பரிபாலனசபை நிர்வாகஸ்தர்கள் எல்லோரும் பட்டு வேட்டி உடுத்து, கழுத்தில் தொங்கும் சங்கிலி மின்னொளியில் ஜொலிக்க, அடிகளாரின் பார்வை படும்படியாக ஒன்றாக அமர்ந்திருந்து பஜனை ஓதிக்கொண்டிருந்தனர்.

சங்கீதபூஷணம் சங்கதிகள் வைத்து வரிக்கு வரி அலங்காரம் செய்யும் வேளைகளில், பரிபாலசபைத் தலைவர் தலையை ஆட்டிப் புன்னகைத்தவாறே, அப்புன்னகையைப் பவ்வியமாக அடிகளாருடனும் பரிமாறிக்கொண்டிருந்தார்.

அடிகளார் எல்லோரையும் நோட்டம் விட்டுக் கொண்டே இருந்தார். அன்றைய பஜனை நிகழ்ச்சிகளிலும் நடைமுறைகளிலும் ஏதோ ஒரு செயற்கைத்தன்மை கலந்திருப்பதனை அவர் உணர்ந்து கொண்டார். பின்னால் உள்ள வரிசையில், குழந்தைகளோடு ஒன்றாக அமர்ந்திருந்த ஒரு கிழவரை, பரிபாலசபைத்தலைவர் அழைத்து வந்து முன்வரிசையில் அமர்த்தியதையும் அடிகளார் கவனிக்கத் தவறவில்லை.

அடிகாளரை ஆலயத்திற்கு அழைத்து வந்திருந்த சைவசமாஜத்தினர் ஒட்டிக்கொள்ளாமல் தூரவிலகி இருப்பதாகவே அடிகளார் உணர்ந்தார். இந்த ஆலயத்திற்கும் தான் சென்று வர வேண்டும் என்ற தனது விருப்பத்தை தெரிவித்தபோது நெருக்கடியான நிகழ்ச்சி நிரலின் மத்தியில் இந்த ஆலயத்தை தவிர்த்துக்கொள்ளலாம்தானே என்றும் கேட்டிருந்தனர்.

அடிகளாருக்கு எல்லாம் விளங்கியது. இந்த ஆலயத்திற்கு வருவதற்கு முன்னர் சென்றிருந்த ஆலயத்தில் நிகழ்ச்சிகளை வேண்டுமென்றே சைவசமாஜத்தினர் இழுத்தடிப்பதுபோலவும் அடிகளாருக்குத் தோன்றியது. அங்கு நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைவேற எட்டரை மணியாகி யதும், சமாஜத்துக்கு திரும்பிச் சென்று அடிகளார் களைப்பாற வேண்டும் என்றும் வற்புறுத்தினர். ஆனால், அடிகளார் தான் இந்த ஞானவிநாயகர் ஆலயத்திற்கு எப்படியும் சென்று வரவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றார்.

இந்த ஆலயத்திற்கு அடிகளாரும் சைவசமாஜத்தினரும் வந்து சேர இரவு ஒன்பது மணியாகிவிட்டது. மாலை ஐந்து மணியிலிருந்து எல்லோரும் காத்திருப்பதாக பரிபாலனசபைத் தலைவர் சொன்னார்.

அடிகளார் நன்றாகக் களைத்து விட்டார் என்றும் பத்து நிமிடங் களுக்கு மேல் இங்கு தங்க முடியாது என்றும் சைவசமாஜத்தினர் முந்திக் கொண்டு கூறியபோது, அதனை மறுத்து, ஒரு மணித்தியாலம் வரை தன்னால் அங்கு நிற்க முடியும் என்பதையும் அடிகளார் குறிப்பிட்டார்.

மூலஸ்தானத்தில் அர்ச்சகர் பஞ்சாரத்தி காட்டியதைத் தொடர்ந்து பஜனை ஆரம்பமாகியது. பக்கவாத்தியக்காரர் சகிதம் இவ்வூரின் கலா

பூஷணமும் அவரின் கோஷ்டியினரும் பஜனையை ஆரம்பித்தனர்.

சற்றுத் தூரத்தில் இருந்த சைவசமாஜத்தினரையும் அடிகளார் இடையிடையே அவதானித்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் உள்ளூர நகைத்துக் கொண்டிருந்தார்.

அடிகளார் ஆலய மண்டபத்தில் பிரவேசித்த சமயம் சிறிய சால்வைகளை வேட்டிகளாக மடித்துக் கட்டிக் கொண்டு அங்கு கூடியிருந்த குழந்தைகளின் கூட்டத்தை இப்போது முன்னால் காணவில்லை. தன் பார்வையைப் பக்கமாகச் செலுத்தியபோது தான் தூரத்தில் பின் வரிசையில் அவர்கள் இருத்தப்பட்டிருப்பதையும் அடிகளார் அவதானித்தார்.

சிவலை அப்புவின் உள்ளத்தில் மூளாத்தீ கனன்று கொண்டிருந்தது. வழமையாக, தன்னுடன் வெள்ளிக் கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனையில் கலந்து கொள்கின்ற அந்தப் பிஞ்சுகள் இன்றைய விசேட தினத்திற்கான வெளியாரின் வருகையினால் பின்தள்ளப்பட்டுப் பின் வரிசையில் அமர்த்தப்பட்டிருப்பது அப்புவுக்கு நிறைந்த வேதனையைத் தந்தது. அந்தப் பிஞ்சுகளின் உள்ளம் உடைந்து விடுமோ என்று கலங்கவும் செய்தார். அவர்களோடு கூட பின்வரிசையில் இருந்த தன்னை மாத்திரம் முன்வரிசைக்கு பரிபாலனசபையினர் அழைத்து வந்திருப்பதும் கூட தன்னை ஒரு காட்சிப் பொருளாகக் காட்டத்தான் என்பதையும் சிவலை அப்பு உணராமல் இல்லை.

அரைமணித்தியாலத்திலேயே திருப்புகழுடன் பஜனை நிறைவேறி விட பரிபாலனசபைத் தலைவர் அடிகளாரை அறிமுகம் செய்து உரையாற்றினார். தங்களின் பெரும் முயற்சியின் பயனாய் அடிகளார் இந்த ஆலயத்திற்கு வந்தது பெரும்பேறு எனக்கூறி அதற்கு ஒப்புதல் தந்த சைவ சமாஜத்தினர் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள் எனவும் புகழ்ந்தார்.

பத்துநிமிடம் தலைவர் உரையில் கழிந்து விட, அதனைத் தொடர்ந்து அடிகளார் உரையாற்றத் தொடங்கினார். நிறைந்த கூட்டத்தின் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்தபோதிலும் அடிகளாரின் உள்ளத்தில் சின்னராஜன் எப்படி இருப்பான் என்ற வினாவே உறுத்திக் கொண்டிருந்தது.

உலகில் துரித மாற்றம் எவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி, இன்றைய நடைமுறை வாழ்வில் சமய அனுட்டானங்களும் கூட மாற்றம் அடைய வேண்டும் என்பதை வலியுறுத்தி, புதிய பார்வையுடன் அடிகளார்

உரையாற்றிக் கொண்டிருந்தார்.

சைவசமாஜத்தினருக்கு மாத்திரமன்றி ஆலய பரிபாலன சபையினருக்கும் அடிகளாரின் உரை புரட்சிகரமானதாகப்பட்டது. அடிகளாரின் உரையால் கவரப்பட்ட பொது மக்கள் அடிக்கடி கரகோஷம் செய்து அக்கருத்துகளை வரவேற்றனர்.


அடிகளாருக்கு இன்றைய நடைமுறைகளைப் பார்த்து ஆலய பரிபாலசபையினர் மீது வெறுப்பே வரவில்லை. அவர்களின் ஒவ்வாத நடவடிக்கைகளுக்கும் போலிநடைமுறைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இன்றும் சமூக அமைப்பு இருக்கின்றது என்பதையே விளங்கிக் கொண்டார். சைவசமாஜத்தினரின் சிந்தனைகளில் மாற்றம் ஏதும் ஏற்படாமல் பத்தாம் பசலிக் கூட்டத்தினராக அவர்கள் இன்றும் இருப்பதையிட்டு அதிசயித்தார்.

எவரும் எதிர்பார்க்காத செய்தியை அடிகளார் தனது உரையின் இறுதியில் தெரிவித்தார். இன்றைய இளைய தலைமுறையினர் சமூக நடைமுறைகளை நன்கு விளங்கிக் கொண்டுள்ள ஆஸ்திகர்கள் என்பதை அறுதியிட்டுக் கூறி, சின்னராஜன் என்ற இளைஞனின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த ஆலயத்துக்கு வருகை தந்ததாகவும் குறிப்பிட்டு, சின்னராஜன் போன்ற இளைஞர்களை உள்வாங்கிக் கொண்டு, ஆலய பரிபாலனத்தை செவ்வனே செய்ய மூத்ததலைமுறையினர் முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். சின்னராஜனை ஒருமுறை பார்க்கவேண்டும் என்ற விருப்பத்தையும் அடிகளார் உரையில் தெரிவித்தார்.

நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து எல்லோரும் மெல்லமெல்ல கலைந்து கொண்டிருந்தனர் பின்வரிசைக் குழந்தைகள் எல்லோரும் தூங்கிப்போய் விட்டனர். சிவலை அப்பு ஒவ்வொருவராக எழுப்பிக் கொண்டிருந்தார். ஒரு குழந்தையை எழுப்பியபோது, “ஞான விநாயகா வரம் தருவாய்” என முனகிக்கொண்டிருந்தான். அப்புவின் உள்ளம் வெந்து கொண்டிருந்தது.

அடிகளார் காரில் ஏறப்போகும்போது, இன்னும் சில இளைஞர்களோடு அங்கு வந்த சின்னராஜன் அடிகளாருக்கு தன்னை அறிமுகம் செய்து கைகூப்பினான். அவனது பார்வையின் தீட்சண்யம் அடிகளாருக்கு பாரதியின் அக்கினிக்குஞ்சை நினைவூட்டியது. இச்சமுதாய அமைப்புக்காடு இந்த அக்கினிக்குஞ்சுகளின் தீயில் வெந்து தணியும் என்ற நம்பிக்கை பிறந்தது.

– யாதும் 2012


கசிவு



# கசிவு

இவன் இவ்வளவு தூரம் முசுடனாக இருப்பான் என்று நான் எண்ணவில்லை. "என்வெயர் கொம்பனி"யில் எனக்கு வேலை வாங்கித் தந்த சண்முகம் அண்ணை இவனைப் பற்றித்தான் முதலில் சொன்னார்.

"தம்பி புறூக் எண்டொரு "வேர்க் சூப்பர்வைசர்" இருக்கிறான்... சிடு மூஞ்சி. அவனோடை தான் கவனமாக இருக்க வேணும். வேலையிலை குறை பிடிச்சு விலத்தியும் போடுவான்..."

அப்போது கூட வேலை மேற்பார்வை யாளன் என்றால் கடுமையாகத்தானே இருப்பான் என்ற எண்ணம் மட்டும் தான் இருந்தது. வேலைக்கு வந்து, இவனைக்கண்டு இவனின் வேலைகளை எல்லாம் அவதானித்த பின்பு தான், "இவனோடு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று என் அந்தராத்மா அடிக்கடி எனக்குச் சொல்லிக் கொள்கிறது.

புறூக்கை முதன் முதலில் கண்ட போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. முன்பு "கல்கி"யில் வெளிவந்த "வாண்டுமாமா"வின் சித்திரக்கதை

யொன்றில் வந்த "விஜயன்" போல நெட்டையனாக இருந்தான். உயரம் ஆறரை அடிக்குக் குறையாமல் இருக்கும். இவனுக்கென்று விசேடமாகத்தான் கட்டில் செய்ய வேண்டும்.

சண்முகம் அண்ணைதான் எங்கள் எல்லோருக்கும் இணைப்பாளர் என்பதால் எங்களுக்குரிய பெரும்பாலான வேலைகளை சண்முகம் அண்ணை மூலம் தான் புறூக் எங்களுக்கு அறிவிப்பான். இதனால் சண்முகம் அண்ணையையும் புறூக்கையும் ஒன்றாக அருகருகாகக் காணும் வாய்ப்பு ஏற்படும். சண்முகம் அண்ணையின் தோள்மூட்டு புறூக்கின் "பாண்ட்" மட்டத்துக்கு தான் நிற்கும். ஓரிடத்தில் நிற்காமல் நீண்ட கால்களை எட்டப்போட்டு நடந்து கொண்டிருக்கும் புறூக்கின் பின்னால் "குடுகுடு" என சண்மகம் அண்ணை ஓடுவதைப் பார்த்தால் கெக்கலி கொட்டிச்சிரிக்க வேண்டும் போலிருக்கும்.

புறூக்கின் தேகத்தக்கு மட்டும் அப்படியென்ன ஒரு நிறம்.

சுண்டினால் இரத்தம் கசிந்த விடுமோ என்று எண்ண வைக்கும் "றோஸ்" நிறம்.

நீண்ட மூக்கு!

மூக்கின் நுனியில் கோபம் "பொத்துக்கொண்டு" வரும்போது அது சிவந்து அதிலிருந்து இரத்தம் சொட்டுவது போலிருக்கும்.

ஒடுக்கமான உடம்புதான். ஆனால் "ஒல்லி" என்று இல்லை.

வெளிர் நீல நிறத்தில் அரைக்கை சட்டை அணிந்திருப்பான். ஒரே "சேட்"டைத்தான் "வோஷிங்" மெஷினில்" போட்டுப் போட்டு எடுக்கிறானோ என்னவோ...

ஆள் சரியான கஞ்சன். சிரிப்பை வெளிப்படுத்துவதிலும் கூடத்தான். தனக்குள்ளேயே அமுக்கி விடுவான்.

எனக்கு அவுஸ்திரேலியாவில் மிகவும் பிடிக்தமான நடைமுறையே காலையில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "குட் டே" என்று சொல்லிக்

கொள்வது தான். ஒருவருக்கொருவர் "இன்று நல்ல நாளாகட்டும்" என்று சொல்வதைக் கண்டு பாடசாலைகளில் எங்கள் பிள்ளைகளிடத்தும் நேர் மனப்பாங்கை வளர்க்க இது ஒரு நல்ல உபாயம் என்று எண்ணிக் கொள்வேன்.

ஆனால், புறூக் மட்டும் வாய் திறந்து எவருக்கும் வாழ்த்துக்கள் கூறியதை நான் கேட்டதில்லை. காலையில் இவனை வேலைத்தளத்திற் கண்டதும் "குட் டே" என்று நாம் சொல்லும் போது அவன் வாயைத் திறக்காமலே வாயினுள் விழுங்கிக் கொண்டு பதிலுக்கு ஏதோ சொல்வது "புறுபுறுப்பது" போலிருக்கும். "நல்ல நாளாகட்டும் என்று இவனுக்கு ஏனடா வாழ்த்துச் சொன்னோம்" என்று மனசு தனக்குள் கறுவிக் கொள்ளும்.

சமூகத்துடன் ஒட்டாத ஒருவனாக புறூக் இருப்பதற்கு என்ன காரணம் என்று சிலவேளைகளில் நான் சிந்திப்பதுண்டு. எனக்குத் தெரிந்த உளவியலை வைத்துக் கொண்டு இவனின் சுபாவத்தை பகுப்பாய்வு செய்து பார்க்க நான் விழைந்ததுண்டு. இவன் தனக்குள்ளேயே எல்லாவற்றையும் மறைத்து வைக்கும் ஓர் "அமுசடக்கி". உளவியற் பரிபாஷையில் இவன் ஒரு "இன்றவேற்". இவன் ஆபத்தானவன். எம்வேலைகளில் குறை காணும் போது இவன் என்ன நடவடிக்கை எடுப்பான் என்று எதிர்வு கூறவே முடியாது. அதற்கு இனித்தான் ஒரு புதுக்கருவி கண்டு பிடிக்க வேண்டும்.

யாரிடமும் ஒட்டாமலிருக்கும் இவன், சண்முகம் அண்ணையுடன் மட்டும் நின்று கதைப்பான். ஆனால், அருகில், சற்று எட்டநின்றாலும் அவன் கதைப்பது எதுவும் காதில் விழாது. சண்முகம் அண்ணைக்கு மட்டும் எப்படித்தான் கேட்குதோ, என்ன தான் விளங்குதோ?

சண்முகம் அண்ணை அப்படியொன்றும் சரளமாக ஆங்கிலம் பேசக் கூடியவரல்லர். அவர் பேசும்போது நிறைய இலக்கணப்பிழைகள் இருக்கும். ஆனால், அவர் அதைப்பற்றி பொருட்படுத்துவதில்லை. தொடர்பு கொள்ளலுக்குத் தேவையான சொற்களைப் பொறுக்கி வைத்தக் கொண்டு சொல்லாடல் புரியும் சண்முகம் அண்ணையின் வல்லபம் கண்டு எனக்குத் திகைப்பாக இருக்கும். பதினைந்து வருடங்களுக்கு மேலாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருபவருக்கு இந்த வல்லபம் கைவரக்கூடியது தான்.

ஆரம்பத்தில் இரண்டு, மூன்று வருடங்கள் வேறு "கொம்பனி"களில் வேலை பார்த்து மீதிக்காலம் முழுவதும் "என்வெயர் கொம்பனியிலேயே வேலை பார்த்து வருவதாக சண்முகம் அண்ணை கூறுவார். ஆனால் அவுஸ்திரேலியாவில் ஒரே கொம்பனியிலேயே வேலைக்கு நின்று நிலைப்பது என்பது ஆச்சரியத்துக்கு உரிய ஒன்று. நன்றாக உழைத்துச் சம்பாதிக்கக்கூடியதாக இருந்தாலும் தொழிற் பாதுகாப்பு இல்லாமை அவுஸ்திரேலியாவின் தொழில் நடைமுறையில் உள்ள பெரும் குறை. ஆனால், அதனை ஒருவரும் பெரிது படுத்துவதில்லை. வேலை வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் ஒரு வேலையிலிருந்து நிறுத்தப்பட்டாலும் இன்னொரு வேலையொன்றைத் தேடுவதில் சிரமமொன்றில்லை.

சண்முகம் அண்ணை மட்டும் எப்படித்தான் இந்த கொம்பனியில் நின்று நிலைத்தாரோ தெரியவில்லை. இந்த கொம்பனியிலேயே ஓட்டுநராக வேலை யில் இணைந்து வெவவேறு வேலைப்பிரிவுகளிலெல்லாம் பயிற்சி பெற்று, இன்று பல்வேறு பிரிவுகளின் வேலைகளையெல்லாம் ஒன்றிணைக்கும் இணைப்பாளராக கடமையாற்றும் சண்முகம் அண்ணை சூரன் தான்.

"என்வெயர் கொம்பனி"யிலுள்ள சகலருடனும் சண்முகம் அண்ணை சகஜமாகப் பழகுவார். எல்லோரிடத்தும் இவருக்கு நல்ல மதிப்பு. இதனால் வேலையாட்களுக்கும் புறூக்குக்கும் இடையிலான தொடர்புகளுக்கும் சண்முகம் அண்ணைதான் இடைத்தரகர். சண்முகம் அண்ணைக்கூடாகத் தான் பலரும் தங்கள் தேவைகளை புறூக்கிடம் எடுத்துச் சொல்வார்கள். அவ்வப்போது புறூக் பற்றியதான என் மன அலசலுக்குத் தீனி போடுவதும் சண்முகம் அண்ணை தான். புறூக்கின் சரித்திரத்தை அப்படியே அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துப் போடுவார்.

புறூக் நல்ல குடும்பச் சூழலில் வளரவில்லையாம். புறூக்கின் அம்மா வும் அப்பாவும் ஒன்றாகத்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றாலும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டார்கள். சண்டைக்குக் காரணம் வேறொன்று மில்லை. இன்னுமொரு பெண்ணை வீட்டுக்கே அழைத்து வந்து அவனது அப்பா சல்லாபம் புரியத் தொடங்கியதிலிருந்து தான் சண்டை ஆரம்பித்த தாம். அவுஸ்திரேலிய நாட்டுக் கலாசாரத்தில் இது ஒன்றும் புதுமையானது

இல்லை. ஆனால், புறாக்கின் அம்மாவால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாதிருந்தது. அந்தப் பெண் தனக்குச் "சக்களத்தி"யாக வந்து விடுவாளோ என்ற பயமும் அவளைப் பற்றிக் கொண்டது. புறாக்கின் அப்பா அந்தப் பெண்ணை தன் இச்சைக்காக மாத்திரம் வைத்துக்கொள்ளவில்லை. அவளை தனி வீட்டு அலகு ஒன்றில் குடியமர்த்தி, அவளுக்குத் தன்னிடத்துப் பிறந்த குழந்தைகளையும் பேணிப் பராமரிக்கத் தொடங்கினார்.

புறாக்கின் அம்மாவுக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. வீட்டுக்குத் தனது கணவன் வந்து போனாலும் அவனை ஒரு பொருட்டாகவே அவள் மதிக்கவில்லை. தனது ஒரே குழந்தையான புறாக்கை நன்கு வளர்த்து விட வேண்டுமென்பதில் கவனமாக இருந்தாள். ஆனாலும், நித்தமும் சச்சரவு நிரம்பிய சூழலிலேயே புறாக் வளர்ந்தான்.

சிலவேளைகளில், சிறுவனான புறாக்கை அந்தப் பெண்ணின் வீட்டுக்கு அவனின்" அப்பா கூட்டிச் செல்வார். அந்த வீட்டின் குழந்தைகள் மூவரும் புறாக்கைக் கண்டு "அண்ணா" என்று வாஞ்சையோடு அழைத்து மகிழ்ந்து குதூகலாமாக ஒன்றாக விளையாடுவார்கள். இது தெரிய வந்ததும் புறாக்கின் அம்மா "பத்திரகாளி" ஆனாள். புறாக்குக்குத் தண்டனையும் வழங்கி, அப்பாவுடன் வெளியே செல்லத்தடையும் விதித்தாள். அப்பாவும் அம்மாவும் இறந்த பின் புறாக் தனியாளாகி, இன்னமும் திருமணம் செய்யாமல் இருக்கிறான்.

பிளவுபட்ட குடும்பச் சூழலும் பிள்ளைப்பருவ அனுபவங்களும் புறாக்கை இப்படி ஆக்கினவோ என்னவோ, இவனுள் வக்கிரம் பாறையாய் உறைந்திருந்தது. அநேகவேளைகளில், இவன் முகத்தில் சலனம் ஏதும் இருக்காது. சில வேளைகளில் மட்டும் மூக்கும் முகமும் சிவந்து போகும்.

இப்படியானவனின் வரலாற்றையே அவனின் வாயைப் பிடுங்கி அறிந்து வைத்திருக்கிறார் என்றால் சண்முகம் அண்ணை கெட்டிக்காரரர் தான். புறாக்கின் கழுகுக் கண்களை நேரில் சந்திக்கவே எவருக்கும் திராணி இருக்காது. அப்படியிருந்தும் சண்முகம் அண்ணை புறாக்கின் எதிரே நின்று அவனுடன் பேசுவார். புறாக்கிடத்தில் செல்வாக்கு மிகுந்தவராக

இருந்தாலும் சண்முகம் அண்ணை ஒருபோதும் எவரையும் "அண்டி" விட்டதில்லை. இன்னும் சொல்லப்போனால், புறாக்கின் மனஓட்டத்தைப் படம் பிடித்துப் பார்த்தவர் போல, சம்பந்தப்பட்டவர்களை புறாக்கிடம் தமது பிரச்சினை களையும் நிலைமைகளையும் தெளிவுபடுத்தும்படி கூறுவார்.

இன்றும் அப்படித்தான்.

அதிகாலையில் வேலை ஆரம்பிக்கும் சிலரில் நானும் ஒருவன். காலையில் சண்முகம் அண்ணை தான் தனத காரில் என்னையும் வேலைக்கு அழைத்து வருவார்.

முதல்நாள் நித்திரையில்லாமல் காலையில் மிகவும் குழம்பிப் போயிருந்தேன். சண்முகம் அண்ணையிடம் லீவு எடுப்பதாகக் கூறியிருந்தும் அவர் விடுவதாக இல்லை. சில "ஓடர்"களை அவசரமாக முடித்துக் கொடுக்க வேண்டியிருப்பதாகக் கூறி வற்புறுத்தினார்.

சண்முகம் அண்ணையிடம் இரவு நித்திரை வராததைப்பற்றிச் சொல்லி வேலைக்கு வராமல் நின்றிருக்கலாம். வேலைக்கு வந்து இப்படி அவதிப்படத்தேவையில்லை.

என் போதாத வேளை, வேலையை ஆரம்பித்து ஒரு சில நிமிடங்களிலேயே "பேர்ணரின்" அருகே அமர்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்தமையை புறாக் கண்டுவிட்டான். ஒன்றுமே பேசாமல் "விசுக்" என்று திரும்பிச் சென்றவன், எதிர்ப்பட்ட சண்முகம் அண்ணையிடம் கண்களால் ஏதோ கேட்டுவிட்டுச் சென்றிருக்கிறான்.

அப்போதிருந்து தான் சண்முகம் அண்ணையும் என்னிடம் நானாகவே சென்று புறாக்கிடம் என் நிலைமையைத் தெளிவுபடுத்தி மன்னிப்பும் கேட்டுக்கொள்ளுமாறு நச்சரித்துக் கொண்டிருக்கிறார்.

நித்திரை தூங்கியமைக்கான காரணமொன்றையும் சொல்லித்தந்து. காலைத் தேநீர் அருந்த எல்லோரும் "கபினில்" கூடும்போது, எவரும் அறியாமல் புறாக்கைச் சந்தித்து தான் சொல்லித் தந்ததை அப்படியே கூறு மாறு ஆலோசனையும் சொன்னார். தேநீர் அருந்தும் வேளை நெருங்க நெருங்க,

நெஞ்சு "திக் திக்" என்று அடித்துக் கொள்கிறது. ஏதோ களவு செய்தவன் போல மன்னிப்புக் கோர நேரிட்டுவிட்டதே என்று மனம் ஏங்குகிறது.

எல்லோரும் தேநீருக்காக சென்று விட்டார்களா என்பதை உறுதி செய்து கொண்டு புறூக்கின் அறையினுள் பிரவேசிக்கின்றேன்.

"புறூக்! இரவு முழுவதும் என் குழந்தைக்கு வருத்தம். ஒரே சத்தியும் காய்ச்சலும்... நான் இரவில் நித்திரை கொள்ளவில்லை... அதனால் என்னை அறியாமலே சற்றுத் தூங்கி விட்டேன்... சொறி"

என் நிலைமையினால், ஆங்கிலம் தெரியாதவன் திக்கித் திணறிப்பேசுவது போல, நிறுத்தி நிறுத்தி சண்முகம் அண்ணை சொல்லித் தந்தவாறே காரணத்தை எடுத்துச் சொல்கிறேன்.

அவனின் இதழ்க் கடையோரம் புன்சிரிப்பொன்று மலர்கிறது. என்னால் நம்பமுடியவில்லை.

"என் காரணத்தை நம்பாமல் என்னை இவன் இகழ்கின்றானா?"

"நோ வொறீஸ் கலா... கம் கம் வீ வில் கோ போ ரீ..."

கையில் "சொக்கிலேற் ரின்" ஒன்றையும் எடுத்துக் கொண்டு. என் கையைப் பிடித்து அழைத்துச் செல்லும் புறூக்கின் செய்கையை நம்பாமல் பிரமித்துப்போய் அவனுடன் கபினுக்குள் இழுபட்டுக் கொண்டே செல்கிறேன்.


கபினில் புறூக்கைக் கண்டதும் எல்லோருக்கும் ஒரே திகைப்பு, அவர்களின் திகைப்பு அடங்கு முன்னரே புறூக் எல்லோரையும் விளித்தான்.

"பிரெண்ட்ஸ்! என் சகோதரிக்கு பையன் ஒருவன் பிறந்திருக்கிறான்.

நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்... சொக்கிலேற் சாப்பிடுங்கள்..”

சொக்கிலேற் ரின்னை ஒவ்வொருவருக்கும் நீட்டிக் கொண்டிருக்கும் புறூக்கை எல்லோரும் அதிசயமாகப் பார்க்கிறார்கள். புறூக்கின் “சரித்திரம்” தெரிந்த சண்முகம் அண்ணை என்னைப் பார்த்து கண்ணால் ஜாடை செய்கிறார்.

– யாதும் 2010


அவலம்



# அவலம்

பெட்டியின் அருகில் ஏற்றி வைத்திருந்த மெழுகுதிரியின் ஒளிச்சுடர், இருளை விரட்டப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. காற்று வீசும் வேளைகளில் அதன் போக்குகளுக் கெல்லாம் வளைந்துகொடுத்து அங்கும் இங்குமாக அலைந்துகொண்டு அது ஜீவமரணப் போராட்டமும் நடத்திக் கொண்டிருந்தது.

கூடம் முழுவதும் சிறியோர் பெரியோர் என்ற வேறுபாடின்றி ஆண்களாலும் பெண் களாலும் நிறைந்திருக்கிறது. எல்லோர் முகங்களும் ஒருவித சோகத்தில் களை இழந்திருந்தன. "கடைசியில் இப்படியாகி விட்டதே" என்று எல்லோருமே வருந்தினர்.

கூடத்திற்கு முன்னாலுள்ள போட்டிக்கோ வெளியில் அமர்ந்து ஒரு சிலர் கதை அளந்துகொண்டிருக்கின்றனர். எங்கள் மண்ணில் இந்த நாட்களில் இடம்பெறும் அவலங் களும் அரசியலும் அவர்களின் பேச்சுகளில் அடிபட்டுக்கொண்டிருக்கின்றன. நேரம் செல்லச் செல்ல உள்ளேயிருந்த ஆண்களிற் சிலரும் புழுக்கம் தாளாமல் வெளியே வந்து அவ்விவாதங்களிலும் கலந்து கொள்கின்றனர்.

ஆண்கள் என்னதான் கதைத்துக் கொண்டிருந்தாலும் பெண்களிற் பலர் வழமையான சம்பாஷணையையே மறந்திருந்தனர். சற்று முன்னர்தான் நடந்து முடிந்துவிட்ட அந்த அவலக் காட்சியின் தாக்கத்திலிருந்து விடுபடமாட்டாதவராய் அந்த நினைப்புகளிலேயே மூழ்கி... ஒரு சிலர் ஏக்கப் பெருமூச்சும் விட்டனர். சில பெண்களின் கண்களில் துளிர்த்த கண்ணீரின் ஈரம் காயாமல் இன்னமும் அப்படியே இருக்கிறது. கண்ணுக்கு முன்னாலேயே நிகழ்ந்து முடிந்துவிட்ட அந்தச் சோக நிகழ்வு எல்லோரின் நெஞ்சையுமே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டிருந்தது. இன்னமும் அந்தச் சம்பவம் எல்லோருடைய கண்களிலும் நிழலாடுகிறது.

துடிப்புடனிருந்த பெரியவரின் கைவிரல்களின் உணர்ச்சியும் அடங்கிக் கையும் மரத்துப் போனபோது, பெரியவரின் வாழ்க்கைத் துணைவியானவள் துடிதுடித்துப்போய்விட்டாள். இத்தனை வருட காலத் தாம்பத்தியத்தில் தனது கணவனின் சுகதுக்கங்களை எல்லாம் தனதாக வரித்துக்கொண்டு கணவனே தெய்வம் என்று வாழ்ந்து வந்த அம்மாளுக்கு, எங்கே தன்னை நிர்க்கதிக்கு ஆளாக்கிவிட்டுப் பறந்து விடுவாரோ என்ற பீதியும் ஆட்கொள்ளத்தொடங்கி அவளின் நெஞ்சமே வெடித்து விடும் போலிருந்தது. அம்மாளோடு சேர்ந்து அங்கிருந்த அனைவருமே பதறினர்.

"டும் டும்... டும் டுடும்... டும் டுடும்..."

திடீரென்று முழங்கிய பீரங்கி வேட்டுகளினால் "போட்டிக்கோ" வெளியிலமர்ந்திருந்த யாவரும் ஒருமுறை அதிர்ந்தனர்.

எல்லாம் ஒரு கணத்துக்குத் தான். பின்னர், தொடர்ந்து முழங்கிய குண்டு வெடிச் சத்தங்களைக் குறித்து "இண்டைக்கு வேட்டைத் திருவிழா" என்று ஒருவர் கூறவும், சுற்றி இருந்தவர்கள் ஆரவாரித்து "ஓம், ஓம்" என்று அதனை ஆமோதிக்கவும் செய்தனர்.

"சரியான தூரத்திலை கேட்குது... மயிலிட்டி அல்லது காங்கேசந் துறைப் பக்கமாத்தான் இருக்க வேணும். நீ என்ன சொல்லுகிறாய் தம்பி, சரிதானே..." –முதியவர் ஒருவர் தனது அபிப்பிராயத்தைக்கூறி, விடலைப் பருவத்துப் பொடியன் ஒருவனைக் கேட்கிறார்.

இப்போதெல்லாம் இளைஞர்கள் கூறுவதைக் கேட்பதில் முதியோருக்கும் பெரும் ஆர்வம். அவர்களிடம் "எல்லாவற்றையும்" கேட்டு அறிந்துவிடலாம் என்ற நம்பிக்கை. தாம் கேட்டறிந்த செய்திகளின் உண்மையில் அக்கறை கொள்ளாது அப்படியே உள்வாங்கி, "இப்படியாம்" என்று மெருகூட்டி அவற்றை ஊர் முழுதும் பரப்பி விடுவதும் கூட முதியவர்களின் பொழுதுபோக்காகி விட்டது.

"ஓம், முதல்லை கிட்ட வெடிச்ச மாதிரித்தான் இருந்துது. இப்ப, இப்ப தூரத்திலை கேக்கிறதாலை, "கன் போட்டிலை"யிருந்துதான் அடிச்சுக்கொண்டு போறாங்கள் போலை கிடக்கு..."

எவ்வாறெல்லாம் நிலைமை மாறிவிட்டது! இளையோர் முதியோர் என்ற வேறுபாடின்றி சம்பாஷணைகளும் விவாதங்களும், முன்னர் என்றால் இப்படியா? "வயசுக்கு மூத்தாக்கள் கதைக்கேக்கை குறுக்கை என்னடா பேச்சு" என்று அதட்டிவிட மாட்டார்களா, என்ன?

"பெடியள் கெட்டிக்காறங்கள் தான்... "அவங்களை"ப் பெடியள் வெளிக்கிட விடாததாலை தான் நாங்கள் இப்படிக் கதைச்சுக்கொண்டாதல் இருக்கிறம், இல்லாட்டில் இருக்கேலுமே..."

"இந்த முறை கரணவாயிலை திருவிழாவும் செய்யப் போறாங்களாம். சிகரம், மேளதாளம் எண்டு ஒரே எடுபிடியாம்..."

"திருவிழாச் செய்யப்போயினமாமோ... பெடியள் அங்கை செத்துக் கொண்டிருக்கிறாங்கள், அவையளுக்குத்தான் நல்ல திருவிழாவும் எடுபிடியும்..."

"ஏன் பெடியளுக்கும் அவங்கள் குடுத்தவங்கள் தானாமே, அள்ளிக் குடுக்கிற பிள்ளையாருக்கும் செலவழிச்சாத்தானென்ன"

கூடத்திலிருந்து சிறு பிள்ளைகள் பெட்டியையே வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்த இரவு நேரத்திலும் நித்திரை

கொள்ளாது அவர்கள் விழித்திருந்தனர். "கணுக் கணுக்" என்று ஒளிர்ந்த மெழுகுதிரிச் சுடரினால் மட்டும் பெட்டிக்குள் உள்ளதை உள்ளபடியே காட்டிவிட முடியவில்லை. எனினும், அந்தப் பெட்டியின் பளபளப்பு அந்த மெழுகுதிரிச் சுடரொளியிலும் நன்கு தெரிகிறது. மிகவும் விலை உயர்ந்த பெட்டியாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனாலும் என்ன? பேச்சு மூச்சற்றுக் கிடக்கும் இந்த நிலையில் விலையுயர்ந்த பெட்டியாக இருந்தால் என்ன, இல்லாவிட்டால் தான் என்ன? எதுவும் உயிர்ப்புடனிருக்கும் வரைதானே மதிப்பும் மரியாதையும். இந்த உலகத்தில் எதுவுமே சாசுவதமில்லை என்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்.

"டப் டும்... டப் டும்..."

இதுவரை ஒலித்த சத்தத்திலிருந்து வித்தியாசமாகக் குண்டுகள் முழங்க, கூடத்தின் உள்ளே இருந்த பெண்களிலும் சிலர் பரபரக்கின்றனர்.

"நல்லா ஷெல் அடிக்கிறாங்கள். எங்கை–எங்கை போய் விழுதோ..."

***

பக்கத்து வீட்டு அன்னம்மாக் கிழவி தனது வீட்டுப் படலையைத் திறந்து வெளியே வந்து இருளையே துழாவியவாறு "பேரன் வருகிறானா" என்று பார்த்தாள். தெருவோரத்தில் நெடிதுயர்ந்து நின்ற பனைமரங்கள் பூதாகரமாகத் தோன்றிப் பயங்காட்டின. கிழவியின் நெஞ்சத்தின் ஒரு மூலையில் திடீரென்று ஓர் ஒலிப்பு...

"உன்ரை பேரன் கடக்கரைக்குக் காவலுக்குப் போறவனாம், உனக்குத் தெரியாதே ஆச்சி?"

அன்னம்மாக் கிழவிக்கு என்ன தெரியும்?

"ஊரவரின் பேச்சு உண்மையாக இருக்குமோ...?"

கொஞ்ச நாட்களாகவே தாயைத்தின்னிப் பொடியனான தன் பேரன் விட்டத்தையே வெறித்து வெறித்துப் பார்த்தவனாய் நித்திரைப்பாயில் உழன்று கொண்டிருந்தமை கிழவிக்கு நினைவுக்கு வருகிறது.

"ஆச்சி, இனி நான் படிக்கப் போகேல்லையணை, என்னோடை படிச்ச பெடியள் விட்டிட்டுப் போட்டாங்கள், அவங்களைக் காண எனக்கு வெக்கமா இருக்கணை"

............

"ஆச்சி, எனக்குச் சாப்பாடு வேண்டாமணை. என்னோடை படிச்ச பெடியன் சென்றிக்கு நிக்கேக்குளை, இண்டைக்குச் சுட்டுப் போட்டாங்களணை"

நேரம் செல்லச்செல்லப் பேரனின் நினைவுகளால் தாக்குண்டு அன்னம்மாக் கிழவி நொடித்துப் போகிறாள்.

***

கூடத்தில் இருந்தவர்களிடையே திடீரென ஒரு பரபரப்பு. எல்லோரின் கண்களுமே ஆச்சரியத்தால் விரிந்தன. பெட்டிக்குள் மீண்டும் உயிர்ப்பு. உணர்வற்று மரத்துப்போயிருந்த கைவிரல்களில் மெல்ல மெல்லத் துடிப்பேற, வெளியே இருந்தவர்களும் பரபரத்து உள்ளே நுழைந்து கொண்டிருக்கின்றனர். எல்லோரின் நெஞ்சங்களும் சந்தோஷத்தால் பூரிக்கின்றன.

உயிர்ப்புற்ற பெட்டியின் திரையில் "மிருதங்கச் சக்கரவர்த்தி" சுப்பையாபிள்ளை முழங்கிக்கொண்டிருக்கிறார். கடைவாயிலிருந்து "இரத்தம்" ஒழுகிக் கொண்டிருந்தபோதிலும் கூட பயப்படும்படியாக எதுவும் நடந்து விடவில்லை.

நல்ல முடிவு! எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கூடத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

"நல்லவேளை... சங்கராபரணத்திலை வாற சங்கர சாஸ்திரியளைப் போல சிவாஜியும் செத்துப் போவரோ எண்டு நான் பயந்து போயிட்டனப்பா..." –இளவயதுப் பெண்ணொருத்தி மற்றவளிடம் சொல்லிக் கொண்டிருக்கும்

போதே பக்கத்து வீட்டுப் படலையடியில் "வான்" ஒன்று விரைந்து வந்து நிற்கிறது. அவசர அவசரமாகச் சில இளைஞர்கள் யாரையோ தூக்கிக்கொண்டு இறங்குகிறார்கள்.

திடீரென்று அன்னம்மாக் கிழவியின் அலறல் அந்தப் பிராந்தியம் எங்கும் எதிரொலிக்கிறது.

"என்ரை ஆத்தையீரோ! என்ரை பிள்ளையை வந்து பாருங்கோடீ...!"

– மல்லிகை


எங்கெங்கு
காணினும்...



# எங்கெங்கு காணினும்...

இரண்டு கிழமைகளாக அவளைக் காணாததில் நான் பெரிதாகக் கவலை யடைந்தேன் என்று சொல்ல மாட்டேன். ஆனால் அவளின் "கொம்பனி" இல்லாததில் என் வேலையில் ஒரு மந்தம் காணப்படுவது உண்மை தான்.

என் வேலையில் மந்தநிலையை அவதானித்தார்களோ என்னவோ காந்தனும் சங்கரநாராயணனும் என்னிடம் வாய்விட்டே கேட்டுவிட்டார்கள் :

"என்னண்ணை, கொம்பனி இல்லாமல் வேலை ஓடுதில்லையோ..."

முதலில் வெறும் சீண்டலுக்காகத் தான் அவர்கள் அப்படிக் கேட்கிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் முடிவுப் பொருட்களின் கணக்கைப் பார்த்துத் தான் அவர்கள் அப்படிக் கேட்டிருக்கவேண்டும். அப்படியானால் உண்மை யில் அவளின் "கொம்பனி" இல்லாமல் நான் பாதிக்கப்பட்டுவிட்டேனா?

அவளின் கொம்பனி இல்லாமல் நான் பாதிக்கப்படுகின்றேன் என்றால் எனக்கும்

அவளுக்கும் உள்ள உறவு தான் என்ன? என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

"அது தான் "கொம்பனி" என்கிறார்களே"

– என் ஆழ்மனத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

"சீ! கொம்பனியா?... அவளுடனா?"
– என் சுயம் விழிப்புக் கொண்டு கொம்பனி என்ற சொல்லின் அர்த்தத்தை உணர்த்தி உடனே என்னை எச்சரித்தது.

சாதாரண வழக்கில் "கொம்பனி" என்பதைத் "தோழமை" என்று சொல்லலாம் தான். ஆனால் இந்த நாட்டில் அதற்கு அர்த்தமே வேறு.

காந்தன் ஒருமுறை என்னிடம் அர்த்தபுஷ்டியோடு சொன்னான்.

"அண்ணை, நீங்கள் இந்த நாட்டுக்குப் புதிசு. உங்களுக்கு கொம்பனி வேணுமெண்டால் "கோப்பி குடிக்கப் போகலாமா?" என்று தான் கேட்க வேணும். . . கேட்டுப் பாருங்கோவன், உங்களுக்குக் கனியும் போலையிருக்கு"

ஆரம்பத்தில் காந்தனின் பேச்சில் உள்ளர்த்தம் ஏதும் இருப்பதாக எனக்குப் பிடிபடவே இல்லை. "கனியும் போலையிருக்கு" என்று விழுங்கிக் கொண்டே அவன் முடிக்கையில் தான் "கொம்பனி"க்கும் "கோப்பி"க்கும் கொச்சையான அர்த்தம் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

காந்தனுக்கு மிஞ்சிப்போனால் முப்பது வயதுக்கு மேல் இருக்காது. இருபது வயதிலேயே இங்கு வந்துவிட்டானாம். அப்படியானால் பத்து வருட கால அனுபவம் அவனுக்கு இந்நாட்டு நடப்புகளை எல்லாம் கற்றுத் தந்திருக்கும் என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

கொச்சைப் பாஷையில் "அவற்றுக்கு" அர்த்தம் என்ன என்று கேட்டு விடலாமா என்று எண்ணியபோதிலும், காந்தனுக்கும் எனக்கு மிடையிலான வயது வித்தியாசத்தைக் கணக்குப் பார்த்து மனம் என்னைத் தடுத்தது.

காந்தன் சுழியன். என் மனத்தடாகத்தைக் கலக்கிவிட்டு, அவனே விளக்க்மும் சொன்னான். அப்பாவித்தனமான ஒரு புன்சிரிப்பினுள் என்னைப் புதைத்துக்கொண்டு அந்த விவகாரத்தை அப்போதைக்கு முடித்துக் கொண்டேன்.

கேரன் என்னோடு பக்கமாக நின்று வேலை செய்பவள். அவள் பகுதியாக முடித்துத் தரும் வேலையைத் தான் நான் தொடரவேண்டும். “என்வெயர்” என்பது அவுஸ்திரேலியாவிலேயே பிரபல்யமான கொம்பனி. மருத்துவமனைகளுக்கும் பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் மற்றும் பல நிறுவனங்களும் வழங்கப்படும் குடிநீர்க்குழாய் வகைகள் எல்லாம் இந்தக் கொம்பனியிலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. நானும் கேரனும் இன்னும் பலரும் “என்வெயர்” என்கின்ற ஒரே குடையின் கீழான தொழிலாளர்கள்.

இன்று என் வேலை ஓடவில்லைத் தான். கேரன் பகுதியாக முடித்து வைத்திருந்த குழாய்களை நேற்றே ஒட்டி முடித்திருந்ததனால், கேரனின் வேலையையும் சேர்த்து இன்று நானே செய்யவேண்டிய நிர்ப்பந்தம்.

“கேரன் இன்று வருவாளோ?”

– என் உள்மன ஆழத்திலிருந்து தான் இது எழுந்தது.

“நான் கேரனுக்காக ஏங்குகிறேனா”

“சேச்சே, அவள் ஒரு . . .“

நினைத்ததை முடிக்கவிடாமல் என் சிந்தனை ஓட்டத்துக்குத் தடையாக மனச்சாட்சி குறுக்கே நின்றது.

“அவளைப் பற்றி நான் என்ன சொல்ல வந்தேன். உண்மையில் அவளை அப்படிச் சொல்லலாமா . . .“

கேரன் இந்தக் கொம்பனிக்கு வேலைக்கு வந்து ஆறு மாதம் தான் இருக்கும். ஆனால் வந்த புதிதிலேயே எல்லோரையும் கவர்ந்தாள் என்று தான் சொல்லவேண்டும். அவள் நடந்து செல்லும்போது ஒவ்வொருவரும் ஒருமுறை திரும்பிப் பார்க்கத் தான் செய்தனர். அப்படியான ஓர் அழகி அவள்.

சுண்டினால் சிவந்து விடும் றோஸ் நிறம்.

மதாளிப்பான உடம்பு.

நூறு வாற் மின்குமிழ்களைப் பொருத்தியது போன்ற கண்கள்.

நேர்வகிடெடுத்து சீவி முடித்த தலையின் பின்னால் “குதிரை வால்“ கொண்டை.

மொத்தத்தில், ஆரம்ப துள்ளற் பாய்ச்சலைக் கற்றுக்கொள்ளும் ஒரு குதிரைக்குட்டி போல அவள் உலா வந்தாள்.

அவளுடைய "கொம்பனி"க்காக என் சக தொழிலாளிகளிடம் ஏக்கம் தெரிந்தது என்பது உண்மை.

"கீனியுமா" என்ற ஆசையோடு அணுகியவர்களிடம் நோகாமல் "நீயும் ஒரு ஆம்பிளையோ" என்ற அர்த்தம் தொனிக்க அவள் சிரிப்பொன்றை உதிர்த்ததாகவும் "கபினில்" தேநீர் அருந்தும் வேளைகளில் சிலர் முணுமுணுத்தனர்.

ஆரம்பத்தில் எனக்கும் கூட, "இவள் என்ன எல்லோரையும் உதாசீனம் செய்வது?" என்ற எரிச்சல் தான் இவள் மீது வந்தது. ஆனால், இவளோடு இணைந்து வேலை செய்யத் தொடங்கியபின் என் அடிமனம் இவளுக்காக இரங்கியது.

இவளும் நானும் பக்கத்துப் பக்கத்து மேசைகளில் நின்று வேலை செய்யத் தொடங்கி இரண்டு மாசம் தான் இருக்கும். மேசைகளுக்கிடையே அதிக வெளி கூட இல்லை. ஒருவரோடொருவர் கதைத்துக் கொண்டிருந்தால் மற்றவர்களுக்குக் கேட்காது. என்னிடத்தில் அப்படி என்ன ஈர்ப்போ, தன்னைப் பற்றி ஓராயிரம் கதைகள் சொன்னாள்.

எனக்கு என்னைப் பற்றியே ஆச்சரியமாக இருந்தது. இளமைக் காலத்தில் கூட என்னுடைய நண்பர்கள் தங்களுடைய காதல் பற்றி எல்லாம் என்னிடத்தில் தான் சொல்லிக் கொண்டார்கள். என்னிடத்தில் சில விடயங்களில் அபிப்பிராயம் கேட்டார்கள். இளமைப் பருவம் கடந்து வளர்ந்த பருவத்தின் நடுப்பகுதிக்கு வந்துவிட்ட என்னிடம் இவள் தன் கதைகளை எல்லாம் சொல்வதென்றால், அப்படி என்னிடம் என்ன இருக்கிறது?

இவளே ஒரு சமயத்தில் என் உள்மனக் கேள்விக்குப் பதிலும் தந்தாள்.

"நீ, யார் எது சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்கிற "ரிசெப்ரிப் ரைப்" சாம், அது தான் உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது..."

கேரன் என்னை "சாம்" என்று பெயர் சொல்லி அழைக்கும்போது, கிளுகிளுப்பாகத் தான் இருக்கும்.

அவள் எவரையும் "நீ" என்று சொல்லித் தான் விளிப்பாள். என்னை மட்டும் தான் பெயர் சொல்லி அழைத்தாள். ஒவ்வொரு கதையையும் சொல்லி முடிப்பதற்குள், தொடக்கத்திலும் நடுவிலும் முடிவிலும் என இணைப்புச் சொல்லாக என் பெயரைத் தான் அவள் பயன்படுத்துவாள்.

"ஞானசம்பந்தர்" என்று எனக்கு நாமகரணம் செய்து எனது பெற்றோர் என்ன புண்ணியம் தேடிக்கொண்டார்களோ தெரியவில்லை. ஆனால் அவுஸ்திரேலியாவில் என் பெயரை "சாம்" என்று சுருக்கி அழைக்க அதில் இடம் இருந்திருக்கின்றதே என நான் அதிசயித்ததுண்டு.

ஏனையோரை "ஹே, யூ" என்று விளித்தவள் "சாம்" என்று என்னைப் பெயர் சொல்லி அழைத்தமையைக் காந்தனும் கவனித்திருந்தான்.

"அண்ணை, உங்களை மட்டும் தான் கேரன் பெயர் சொல்லிக் கூப்பிடுறாள். கவனிச்சியளே. விட்டிடாதேங்கோ, பிடிச்சுக் கொள்ளுங்கோ..."

காந்தன் என்னிடத்தில் "நக்கலாகக்" கூறினாலும் "கேரன்" என்ற பெயரை "உவிந்து" கொண்டே சொல்லும்போது அவள் மீதான தன் ஆசையைத் தான் வெளிப்படுத்துவான். நல்ல வேளை! அவன் வேறு பிரிவில் வேலை செய்து கொண்டிருந்தபடியால் வேலை செய்யும்போதே கேரன் என்னிடம் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருப்பதை அவதானிக்கும் சந்தர்ப்பம் அவனுக்கில்லை.

கேரன் கதை கதையாக தன்னைப் பற்றி எல்லாம் சொன்னாள்.

தன் குடும்பப் பின்னணி, தான் வாழ்ந்த சூழல், தனது பள்ளிப்பருவ அநுபவங்கள், தன் இளமைக்கால விருப்பங்கள்... என்று விபரமாகச் சொன்னாள்.

நான் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பேன். சிலவேளைகளில், ஒருசில வார்த்தைகளை மட்டும் கூறி அவளை ஊக்குவிப்பேன். இந்த ஊக்குவிப்பினால் தானோ என்னவோ தன் அந்தரங்கத்தையும் என்னிடம் சொல்லத் தொடங்கினாள்.

உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போதே ஜோனுக்கும் கேரனுக்குமிடையில் காதல் வந்துவிட்டது. இருவரும் ஒன்றாகத் தனி

அறையில் வாழத் தொடங்கினர். படிப்பை இடைநிறுத்திக்கொண்டு ஜோன் வேலைக்கும் போய் வந்தான். ஒரு தனி அறையிலான வாழ்க்கையில் கேரன் கர்ப்பமானாள். தன் குழந்தை பற்றிய கற்பனையில் ஜோன் மீது அளவு கடந்த காதலைப் பொழிந்தாள். தன் எதிர்காலக் குழந்தைக்கு என்ன என்ன செய்யவேண்டும், என்ன என்ன எலாம் வாங்கிக் கொடுக்கவேண்டும், எப்படியெல்லாம் வளர்க்கவேண்டும்... என்றெல்லாம் கோட்டையே கட்டத் தொடங்கினாள்.

கதையின் இடையே அவள் கண்ணீர் சிந்தியபோது தான் இவள் வாழ்க்கையிலும் ஏதோ கொடுமை நிகழ்ந்திருக்கின்றது என்று நான் உணர்ந்தேன். அவள் அந்தக் கொடூரக் கதையை விம்மலோடு சொன்னாள்.

"சாம்! ஜோனுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவனும் இவனும் சேர்ந்து ஒன்றாகக் குடிப்பார்கள். அந்த நாட்களில் எங்களுடனேயே இரவில் அவன் தங்கிச் செல்வான்... அன்றும் அப்படித் தான்..."

கேரன் தயங்கினாள். நான் "உம்" கொட்டினேன். தயங்கிவிட்டு, முகத்தில் கடுகடுப்பை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்.

"சாம்! ஜோனை நம்பித் தான் அவனோடு ஒன்றாக வாழ்ந்தேன். அவன் என் குழந்தைக்கு பொறுப்பான தந்தையாக இருப்பான் என்று தான் நம்பினேன். ஆனால் அவன்... தன் காதலியை இன்னொருவன் மானபங்கப்படுத்த முனைந்ததைக் கண்டும் ஒன்றும் பேசாமலிருந்தான்... நான் கொதித்து ஜோனிடமே நியாயம் கேட்டு எதிர்ப்புத் தெரிவித்தேன். நான் எதிர்ப்புத் தெரிவிக்கவே என் வயிற்றில் உதைந்துவிட்டு, நான் போட்ட கூச்சலில் ஓடிவிட்டான்...

கேரன் குலுங்கி அழுதாள்.

"அந்தக் கணமே என் கர்ப்பம் கலைந்துவிட்டது. என் கனவுகள் பொடிப் பொடியாகி விட்டன. நான் அழுதுகொண்டே எங்கும் அலைந்தேன்..."

தளுதளுத்த குரலில் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தவள் திடீரென இறுக்கமானாள்.

"சாம்! ஒரு சில வருடங்கள் தான் நான் அலைந்தேன். ஆனால், அதன்பின் என்னிடத்திலிருந்த பயம் எல்லாம் போய்விட்டது. அந்த

ஆம்பிளையளை எல்லாம் பழிவாங்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்..."

இவள் என்ன செய்திருப்பாள் என்று எண்ணி என் மனத்திரையில் தமிழ்த் திரைப்படம் ஒன்று விரிந்தது. என் நினைப்பை உடைத்துக்கொண்டு, அவளின் குரல் ஒலித்தது.

"நான் என்னையே மாற்றிக்கொண்டேன், சாம். என் இஷ்டத்துக்கு நான் ஆம்பிளையளோடு அலைந்தேன், சாம்..."

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவுஸ்திரேலியப் பத்திரிகைகள் சிலவற்றில் தமது கட்டுடல்களைக் காட்டி வெளியிட்டிருந்த விளம்பரங்கள் நினைவுக்கு வந்தன.

இவளின் வக்கிரம் எனக்குப் புரிந்தது. ஜோனின் நடத்தையால் ஏற்பட்ட கொடூரம் இவளில் ஆழமான வடுவை ஏற்படுத்திவிட்டது. அதனால் தான் ஆண்களை எல்லாம் இவள் உதாசீனம் செய்கிறாள்...

நினைவுகளின் சுழிப்பில் அமிழ்ந்து போயிருந்த என்னை "சாம்" என்ற கேரனின் அழைப்பு மீட்டு வந்தது. கேரன் சிரித்துக்கொண்டு நின்றாள்.

எனக்குள் ஒரு மலர்ச்சி. அதனை முகத்தில் வரவழைத்துக் கொண்டு கேட்டேன் :

"ஹாய்! எங்கே போயிருந்தாய் இவ்வளவு நாளும்..?"

கேரன் வேலையைத் தொடங்கிக்கொண்டே கதையாகச் சொல்லத் தொடங்கினாள்.

"சாம், நானும் பெண் தானே... எனக்கும் ஆசியப் பெண்களைப் போலத் தான் ஆசைகள் எல்லாம் உண்டு.. எனக்கும் குடும்ப வாழ்க்கை கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டு தான் இருந்தேன்... அண்மையில் தான் "ஸ்ரீவ்" சந்தித்தான். நான் உன்னிடமும் சொல்லவில்லை... நான் இப்போது அவனுடன் தான் ஒன்றாக இருக்கிறேன்..."

திகைப்பில் எனக்குள் பூச்சிகள் பறந்தன. கேரன் தொடர்ந்தாள்.

"ஸ்ரீவ் நல்லவன், சாம். அதனை உறுதிப்படுத்தும் வரை தான் உன்னிடத்திற் கூட சொல்லாமல் இருந்தேன்..."

நான் இடைமறித்தேன்.

"அதெல்லாம் சரி, அதற்காக இரண்டு கிழமைகளாக நீ ஏன் வேலைக்கு வராமல் இருக்கவேண்டும்...?"

அவள் முகம் குங்குமப் பூ நிறத்தில் சிவந்தது. நாணத்தை முதன்முதலில் அவளிடத்தில் தரிசித்தேன்.

"சாம், என் தவறான நடத்தைகளால் நான் தடைமருந்துகள் எல்லாம் உபயோகித்தவள்... ஸ்ரீவுடன் இப்போ ஒன்றாக வாழத்தொடங்கியபின் இவனிடத்தில் எனக்கு குழந்தை உண்டாகாதா என்ற ஏக்கம் வந்துவிட்டது. ஆனால்..."

திடீரென்று நிறுத்திக்கொண்டு அவள் என்னை நிமிர்ந்து நோக்கினாள். அக்கண்களின் ஒளியைக் கண்டு நான் என்னுள் ஊகித்துக் கொண்டேன். என் ஊகம் சரியானது தான் என அவள் வார்த்தைகளால் ஆமோதித்தாள்.

"சாம், எனக்கு இரண்டு கிழமைகளாக சத்தி... டொக்ரரிடம் போய் நான் கர்ப்பமானதையும் உறுதி செய்துகொண்டு வந்துவிட்டோம்... நான் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறேன்..."

"அதை நீ சொல்லித் தான் தெரியவேண்டுமா" எனக் கூறிவிட்டு அவளுடன் சேர்ந்து நானும் கலகலப்பாகச் சிரித்துக் கொள்கிறேன்.

அவள் "செல்போன்" அழைக்கிறது.


செல்போனில் கதைத்துக் கொண்டிருந்தவள் முகமலர்ந்து பரபரத்தாள். விபரம் அறியாமல் "என்ன?" என்பது போல அவளை விளித்து நோக்கினேன்.

"சாம், எனக்கு சத்தி என்பதால் உணவில் வெறுப்புத் தானே... என் அன்ரி, அது தான் ஸ்ரீவின் அம்மா எனக்காக "சூப்" தயாரித்துக்கொண்டு வந்து வாசலில் காரில் காத்திருக்கிறாள்..."

கதையைச் சொல்லி முடிக்குமுன்பே அவள் துள்ளிப் பறந்தாள். நாணத்தால் சிவந்த அவள் முகத்தில் காதலை விட தாய்மையின் சாயல் கூடுதலாகப் படிந்திருப்பதை நான் உணர்கிறேன்.

– யாதும்


மனிதர்கள்



# மனிதர்கள்

வியப்பாக இருந்தது.
பேரழகியாய்த் தெரிந்தாள்.
கூடத்தின் வழியே தான் வந்தாள்.
சொரசொரப்பான
தரை விரிப்பிலும் காலடி ஓசை.
இரு புறங்களிலும் கணினிகளோடு
அலுவலர்கள்.
ஒயிலாகத்தான் அசைந்தாள்.
ஆனாலும்...
இவளை எவரும்
பொருட்படுத்தவே இல்லை.

அருகில் வந்து முறுவலித்தாள்
செயற்கையை உணர்ந்தேன்
"யாராக இருப்பாள்?"
"என்ன விசாரிப்பாள்?"
என் உள் மன ஓட்டமும் பதிவாகியதோ,
என்னவோ...
இவளது சட்டை ஒளிர்ந்தது.
ஆங்கிலத்தில்...
டோலி/உளவுத்துறை

கணினியை இயக்கினாள்.
இரு பக்கங்களிலும் திரைகள்.
என் முன்னாலுள்ள திரையில்
என்னைப்பற்றிய விபரங்கள்.
நான் கைதாகி ஒரு மணி கடந்திருக்காது.
எப்படி, இவ்வளவு விரைவாக?
இவர்களின் வேகம்
மலைப்பைத்தந்தது.
உள்ளுக்குள்...
நெஞ்சு படபடத்தது.

பேச ஆரம்பித்தாள்.
“ஆச்சரியமாக இருக்கிறதா?”
திரையிலுள்ள
என் முகத்தில் அது தெரிந்தது.
“உன் உலகிலிருந்து வந்த முதலாவது பெண், நீ”
திரையில் மேலும் சில உருவங்கள்.
”இவர்கள் நீங்கள்
அனுப்பி வைத்த ஒற்றர்கள்.”
என் விழிகள் விரிய...
கூண்டுகளுள் அடைபட்டு, எமது ரோபோக்கள்.

என்னை உற்றுப் பார்த்தாள்.
“எம் உலகைச்
சுற்றிப் பார்ப்போமா?”
என் பதிலுக்குக் காத்திருக்கவில்லை.
திரையில் சலனம்.
பல்வேறிடங்களையும் கடந்து –
இலத்திரனியல் நுட்பங்களைக் காட்டி –
ஆய்வு மையங்கள்...
அதிசயிக்க வைத்தன.

டோலி அட்டகாசமாகச் சிரித்தாள்.
“இன்று முதல் நீ எம் பிரஜை;
முதலில் சில சோதனைகள்;
உன் மூளையின்
சில பிரிவுகள் செயலிழக்கும்
மூளையைக் கட்டுப்படுத்தும்
கருவி பொருத்தப்படும்.
எம் உலகின் சட்டதிட்டங்கள்
அறிவிக்கப்படும்.
அதன் பின்பு...
எம்முள் ஒருத்தி ஆகிவிடுவாய்.”

உடம்பு உதறியது.
உதறலை இவள் கண்டு
கொண்டிருக்க வேண்டும்.
கேட்டாள்:
”எதுவும் தெரிந்து கொள்ள வேண்டுமா?
தலையசைத்தேன்.
”உங்கள் உலக மக்களுக்கு
ஆசாபாசங்கள் இல்லையா?
என் கேள்வியில்...
அவள் திகைத்தாள்.

மையநிலையத்திலிருந்து சமிக்ஞை.
“எம் உலகைப் பாழாக்கி விடுவாள்.
பூமிக்கே எறிந்து விடுங்கள்.”
என் வாய் முணுமுணுத்தது;
“நீங்கள் இயந்திரங்கள்
உங்களுக்கு வாழ்வியலே இல்லை
நாங்கள்...
ஆசா பாசங்களில் திளைக்கும் மனிதர்கள்!”

# நூலாசிரியன் பிற நூல்கள்

நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைள்
(சிறுகதைத் தொகுதி)

பாட்டுத்திறத்தாலே
(சிறுகதைத் தொகுதி)

மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல்
(கட்டுரைத் தொகுதி)

புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும்
(விமர்சன கட்டுரைகள்)

ஏனிந்த தேவாசுர யுத்தம்
(கவிதைத் தொகுதி)



## விதந்து பேசத்தக்க படைப்புகள்

... ஓர் இலக்கியப் படைப்பாளியின் ஆக்கங்களுக்கு ஊட்டமாக ஏனைய கலைகளின் மீதுள்ள நாட்டமும் ஆற்றலும் அமையும் என்ப-தற்கு நல்ல உதாரணம் இவரது படைப்புகள்.

-பிரபல எழுத்தாளர் தெணியான்

... மனித நடத்தைகளையும் வாழ்வினையும் கூர்ந்து அவதானிக்கும் அவரது வல்லமை, புரிந்துணர்வு, மனிதாபிமானம், மனித மேம்பாட்டை அவாவும் தன்மை, பொருத்தமான உத்திகளைத் தேர்ந்து அனுபவங்களைக் கதை வடிவில் வெளியிடும் ஆற்றல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவனவாக இத்தொகுதி யிலுள்ள சிறுகதைகள் அமைகின்றன. யதார்த்த நெறிக்குட்பட்ட அவரது கதைகளில் இழையோடும் மனிதாபிமானமும் வாழ்க்கை நிகழ்வுகளை விஞ்ஞான அடிப்படையில் விளக்க முனையும் திறனும் விதந்து பேசத் தக்கவை.

-தமிழ்ப் பேராசிரியர் சி. தில்லைநாதன்

... தமிழ்ச் சிறுகதையுலகின் புதிய பார்வையினையும் உள்ளடக்க வலு வினையும் எழுதி வரும் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் களில் ஒருவர், த. கலாமணி... சமூக அவலங்கள், மனமுரண் என்பவற்றை உளவியல் ரீதியாக, வலுவும் பொலிவுமான நடையில் கலாமணி சித்திரமாக் கியுள்ளார்.

-"ஆதவன்"

... அறிவியலின் ஆதிக்கம் உங்கள் கதைகளில் அனுகூலமாய் உள்ளது... உங்கள் கதைகளில் மொழி ஆட்சி முக்கியத்துவம் பெறுவது ஒரு சிறப்பம்சம்.

-திரு. க. சிங்காரம்

MATHI COLOURS
Nallur 021 2229285